AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 24

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## நவராத்திரி சிறப்பு செய்திகள்!

★ கல்விக் கடவுள் கலைமகள்! ★ அக்டோபர் மாத ராசி பலன்

★ ஆரோக்கியமளிக்கும் மூலிகைகள்! ★ விஜயதசமி மகிமை!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai



இனிய சத்வித்யா வாசகர்களே! நமது இதழுக்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவு எங்களை மகிழ்ச்சிகொள்ள வைக்கிறது.

பெருமாளுக்கு உகந்த மாதம் என்று போற்றப்படும் புரட்டாசி மாதத்தில் பாதியைக் கடந்து விட்டோம், மஹாளய அமாவாசை என்னும் நீத்தார் கடன் தீர்க்கும் அறிய நாள் இந்த மாதத்தின் ஆகப்பெரும் சிறப்பு! அதனினும் மேலாக முப்பெருந்தேவியரை முறையாகக் கொண்டாடி மகிழும் வண்ணம் பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் நவராத்திரி கொண்டாட்டங்கள் களைகட்டும் நேரம் இது இறுதியில், வெற்றி நமக்கே என நல்லோர்கள் கொண்டாடும் விஜயதசமியும் நம்மை விழிப்புடன் விளங்கச் செய்யும்! இந்த இனிய பண்டிகைகளை இல்லந்தோறும் கொண்டாடி தர்ம சிந்தனையோடு நேர்மையான உள்ளத்தோடு நிறைவான வாழ்வை அருள வேண்டும் என்று இறைவனை திரும்பிய திசையெல்லாம் ஒலிக்க, திவ்யமான வாழ்க்கையை அனைவரும் பெற்று இன்புற வேண்டுகிறோம்.

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

AstroVed

# சத்வித்யா

பக்கங்கள்


நவராத்திரி சிறப்பு செய்திகள் --------- 3

ஆசைகளை நிறைவெற்றும் காமேஷ்வரி எந்திரம் ---------6

மகாளய அமாவாசை --------- 7

கட்டழக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் --------- 8

கல்விக் கடவுள் கலைமகள் ---------11

ஆரோக்கியமளிக்கும் மூலிகைகள் ---------14

தியாகராஜ அமிர்தம் ---------15

கைகளே சந்தனக்கட்டை ---------19

ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினியும் விஜயதசமி மகிமையும் ---------22

பெண்மையைப் போற்றும் நவராத்திரி ---------25

ஆன்மீக கெள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும் ---------27

அருள்மிகு வீரடடேஸ்வரர் திருக்கோயில் ---------29

கலைமகள்/ திருமகள் அருள் பெற ---30

அக்டோபர்- ராசி பலன் - 2021 ---------31



# நவராத்திரி சிறப்பு செய்திகள்!

~ கீதாமணி

## நவ துர்க்கை வழிபாடு

நவராத்திரியின் கதாநாயகி சக்தியே! தேவி பல வடிவங் கொண்டவள். அவ்வடிவங்களில் ஒன்பது வடிவங்கள் மிகச் சிறப்புகள் கொண்டுள்ளன.

சக்தியின் ஒரு அம்சமான துர்க்கையை நவராத்திரி புண்ணிய தினங்களில் அலங்கரித்து பூஜித்து வழிபாடு செய்தால் நம் வாழ்வில் நலங்களும், வளங்களும் குவியும் என்பது நம் முன்னோர்கள் கண்டறிந்த உண்மையாகும். அந்த துர்க்கைக்குத்தான் இப்படி எத்தனை திருநாமங்கள்! ஒன்பது வகை துர்க்கையாக தேவி இருக்க, ஒவ்வொரு தேவியும் பக்தர்களுக்கு அருளும் நன்மைகள் இவை------------

பசித்தீ, காமவேகம் போக்கும் - வந்ஹி துர்க்கை
மனங்கொண்ட பயம் நீக்கும் - வனதுர்க்கை
வாழ்வில் வெற்றிகள் அருளும் - ஜலதுர்க்கை
நோய் தீர்க்கும் மருந்தாக விளங்கும் - ஸ்தூல துர்க்கை
மன அமைதிக்கு வழிகாட்டும் - விஷ்ணு துர்க்கை
ஞானத் தெளிவு அளிக்கும் - பிரம்ம துர்க்கை
பக்தர்களின் பகை அழிக்கும் - ருத்ர துர்க்கை
எதிர்பாராத இன்பம் தரும் - மகா துர்க்கை
மரண பயத்தை அகற்றும் - சூலினி துர்க்கை

## மகா சக்தி பீடம்

கேரள மாநிலத்தில் திருச்சூர் அருகே அமைந்துள்ளது. பகவதி கோயில் இவ்வாலயத்தில் உள்ள ரகசிய அறையில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சக்கரம் உள்ளது. இந்த மகா சக்தி பீடங்கொண்ட பெயர் க்ஷகுடும்ப பகவதி என்பது. இந்த மகாசக்தியின் மீது ஆதிசங்கரர் தனது 11 ஸ்லோகங்களில் போற்றி பாடியுள்ளார். அரக்கன் தாராசூரனை வதம் செய்த பைரவியாகவும் இந்த அம்பிகை வழிபடப்படுகிறாள்.

## யந்திர வடிவ அம்பிகை

சென்னை தாம்பரம் அருகே உள்ள பண்ருட்டி கண்டிகை என்னும் சிற்றூரில் அமைந்த ஆலயத்தில் திதி நித்யா தேவிகள் என வழங்கப்படும் வாராஹி, மாதங்கி ஆகிய அம்மன்கள் யந்திர வடிவில் காட்சி தருகிறார். அன்னை ராஜராஜேஸ்வரி பூரண மகா வடிவில் இக்கோயிலில் கொலுவீற்றுள்ளார்.

## தவக்கோல மகாலட்சுமி

வழக்கமாக லட்சுமி தேவி என்றாலே பட்டாடை பூண்டு நகைகள் கழுத்தில் நிறைந்த பிராட்டியே நினைவுக்கு வருவாள். ஆனால் வித்தியாசமாக இந்த தேவி ஆந்திர மாநிலத்தில், விஜயவாடா சமீபமுள்ள மங்கள கிரி தலத்தில் மட்டும் எளிய தவக்கோல திருக்காட்சியை அருளுகிறாள்.

## முதல் அம்மன் கோயில்

தமிழகத்தில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட அம்மன் கோயில் என்ற பெருமை கொண்டுள்ளது. காஞ்சிபுரக் காமாட்சி அம்மன் திருக்கோயில் இப்படி அம்மனுக்கென்றே ஒரு சில ஆலயங்களே உண்டு .

## அம்பிகையின் ஆயுதங்கள்

பொதுவாக ஆலய அம்பிகைகளின் திருக்கரங்களில் பாசம் (கயிறு)

அங்குசம், சூலம் மற்றும் நீலோத்பலமலர் ஆகியவை காட்சி தரும். இவைகளுக்கு உரிய விளக்கமிது.

மனிதன் செய்யும் பாவங்களிலிருந்து மீட்பது பாசம்
மனதில் ஓங்கும் ஆணவத்தை அடக்கும் அங்குசம்
தீய வழிகளில் ஈர்க்கும் சக்திகளை அழிக்கும் சூலம்
இவைகளிலிருந்து மனிதனை பாதுகாக்கும் அம்பிகை தன்னை சரணபுகும் உயிர்களை மாயையிலிருந்து மீட்டு விடும் தேவி.
தேவி பக்தர்களை காக்கவே ஒரு கரத்தை அபய முத்திரையாக கொண்டுள்ளாள்.

## நந்தி வாஹினி

சிவனின் வாகனமான நந்தியின் மீது அமர்ந்து காட்சி அளிக்கும் அம்பிகையை பொள்ளாச்சி அருகிலுள்ள பெரியகளந்தை ஆதீஸ்வரர் திருக்கோயிலில் தரிசிக்கலாம். தனி சந்நிதி கொண்ட இத்தேவியின் திருநாமம் அ/மி பெரியநாயகி அம்பாள் என்பது.

## மூன்று செல்வம்

சரஸ்வதியை வழிபட கல்வி கிடைக்கும். லட்சுமியை வணங்க, செல்வ செழிப்பு உண்டாகும்.
ஆனால் தேவி காமாட்சியை பூஜிப்பவர்களுக்கு கல்வி, செல்வம் கிடைப்பதோடு மட்டுமின்றி வீரமும் கிடைக்கும். 'கா' என்பது சரஸ்வதியை குறிக்க, 'மா' என்பது லட்சுமியை குறிக்க, காமாட்சி வழிபாடு மேலே கூறிய கல்வி, செல்வம், வீரம் என்ற மூன்று செல்வங்களையும் தந்துவிடும்

## பராசக்தியின் வடிவங்கள்

அன்னை பராசக்தி கொண்ட பத்து வடிவங்களே 'தசமகா வித்யா' என்று சிறப்பித்துக் கூறப்படும்.
அவை காளி, தாரா, திரிபுரசுந்தரி, புவனேஸ்வரி, திரிபுரபைரவி, சின்னமஸ்தா, தூமாவாதி, பகளாமுகி, மாதங்கி, கமலாத்மிகா என்று வரிசைப்படுத்துவார்கள். இந்த 10 சக்திகளிலிருந்து தான் திருமாலின் தசாவதாரங்கள் தோன்றியது என்று புராண நூலொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.

## மாரியம்மன் யார்?

தனது தந்தையார் இட்ட கட்டளையை சிரமேற்கொண்ட அவரது புதல்வன் பரசுராமர் தன் தாயான ரேணுகா தேவியின் தலையையே வெட்ட நேர்ந்தது. அப்படி வெட்டுண்ட சிரம் தான் மாரியம்மனாக வழிபாடாகிறாள்.

## தேவி வஜ்ராங்கு சா

பலரால் அறியப்படாத "தேவி வஜ்ராங்குசா ஜைனர்களால் ஆராதிக்கப்படும் தேவதை. இத்தேவி குறித்து ஜைன நூலான பிரதிஷ்டா சாரோதத்தில்," அவள் அங்குசம், வீணை, சுவடி இவைகளை ஏந்தி புஷ்பக விமானத்தில் வருவதாக கூறப்பட்டுள்ளது. ஜைனர்கள் இத்தேவியை 16 வித்யா தேவியர்களில் ஒருவராக 4 ம் நிலையில் வைத்து வணங்குவர்.

## சக்தி பூஜை பலன்

சீதா பிராட்டியை இராவணனிடமிருந்து மீட்க, இலங்கை நாட்டிற்கு புறப்படும் முன் ஸ்ரீராமர் துர்கா பூஜை செய்து விட்டே கிளம்பினார்.

பகவான் கண்ணன் காத்யாயினி பூஜை புரிந்து பலன் பெற்றுள்ளார்.

மகான் குமரகுருபரர் அன்னை சரஸ்வதியை துதி புரிந்து அதனால் ஹிந்தி மொழி அறிவு பெற்று வடநாட்டாரையும் தன் வயப்படுத்திக்கொண்டார்.

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் காளி தேவியை பூஜித்து அவள் அருளால் வாழ்க்கை நெறிமுறைகளை பாமரனும் அறியும் வகையில் உணர்த்த முடிந்தது.

சக்தி வழிபாட்டை மேற்கொண்டு கணக்கற்ற முனிவர்கள், புலவர்கள், அடியார்கள் என நற்பேறுகள் அடைந்துள்ளதை பல புராண நூல்கள் விளங்குகின்றன.

## நவராத்திரி வழிபாட்டில் இடம் பெறுபவைகள்

நவராத்திரி தினக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தப்படும் சில பொருட்கள் இவை.

வீட்டு வாசலிலும், பூஜை அறையிலும் போடப்படும்

கோலங்களில் அரிசி மாவு, கோதுமை மாவு, முத்து, அட்சதை, கடலை பருப்பு, மலர், காசு, கற்பூரம் இவை அவரவர் குடும்ப மரபுப்படி பயன்படுத்தப்படுகின்றன.

அந்த ஒன்பது தினங்களிலும் இசைக்கப்படும் ராகங்களாக தோடி, கல்யாணி, காம்போதி, பைரவி, பந்து வராளி, நீலாம்பரி, பிலஹரி, புன்னாகவராளி, வஸந்தா ஆகியவைகள் உள்ளன.

வில்வம், துளசி, மரு, கதிர்பச்சை, சந்தன இலை, தும்பை இலை, பன்னீர் இலை, விபூதி பச்சை, மருக்கொழுந்து இவைகள் நவராத்திரி பூஜையில் இடம் பெறும் அர்ச்சனை பொருள்கள் ஆகின்றன.
மேற்கண்ட பூஜைக்கு நைவேத்திய உணவுப் பொருளாக உள்ளவை வெண்பொங்கல், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், கதம்ப சாதம், தயிர் சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், பாயசம், அக்கார வடிசல் ஆகியவைகள்.
பூஜைகள் நிறைவேறியவுடன் இந்த உணவு வகைகளை கூடியிருப்போருக்கு பிரசாதமாக வழங்கலாம்.

### வித்தியாச உரு சரஸ்வதி தேவி

எந்த இடத்திலும் தன் கரங்களில் சரஸ்வதி தேவி வீணை ஏந்தி காட்சியளிப்பாள். ஆனால் வடக்கில் உள்ள ஆஜ்மீரிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள புகழ்பெற்ற புஷ்கரம் தலத்தில் உள்ள சிவாலயத்தில் கலைமகள் வீணை ஏந்தாத திரு உரு தனிச்சன்னதியில் இடம் பெற்றுள்ளது.








KABA SURA
KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

# ஆசைகளை நிறைவேற்றும் காமேஷ்வரி எந்திரம்

பதினைந்து திதிகளை ஆளும் நித்திய தேவிகளில் முதன்மையாக இருப்பவர் ஸ்ரீ காமேஸ்வரி ஆவார். திதிகளில் முதலாவது திதியான பிரதமை திதியை ஆள்பவர் இந்த காமேஷ்வரி என்னும் நித்திய தேவி ஆவார். இல்லுலக பேரின்ப ஆசைகளான பொன், பொருள், வீடு, மனை வாகனம் போன்ற எண்ணற்ற சுகங்களை இந்த பிறவியில் நம் விருப்பப்படி அனுபவிக்க ஒரு கொடுப்பினை வேண்டும். நம் எல்லோருக்கும் நாம் நினைத்த மாதிரியான வாழ்வு அமைவதில்லை. நாம் விருப்பப்பட்ட அனைத்துவிதமான இகலோக ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றவும், அனைத்து விதமான சுகங்களை தங்கு தடையின்றி அனுபவிக்கவும் ஸ்ரீ காமேஸ்வரி எந்திரத்தை வைத்து தினமும் வழிபாடு செய்யலாம். அதுமட்டும் அல்லாமல் இசை, நடனம், நாட்டியம், திரைப்படம் போன்ற கலைத்துறையில் இருப்பவர்களின் ஆக்க அறிவை மேம்படுத்தவும், மன சஞ்சலம் உடையவர்கள் மனதை ஒரு நிலைப் படுத்தவும் இந்த ஸ்ரீ காமேஸ்வரி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் செண்பக மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேலே கூறிய அனைத்து சுகங்களையும் எளிதில் நிறைவேற்றி கொள்வதுடன் சொத்து சுகங்களை எளிதில் அடையலாம்.




**ஸ்ரீ காமேஸ்வரி நித்ய தேவி எந்திரத்திற்கு உண்டான மந்திரம்:**

"ஓம் ஐம் கிலீம் ஸ்ரீம் ஹம் காமேஸ்வரி தேவியே நமஹ"

# மகாளய அமாவாசை

~ கீதாமணி

கடந்த காலத்தில் இறந்து போன நம் முன்னோர்களையே "பித்ருக்கள்" என அழைக்கிறோம்.

அந்த பித்ருக்கள் அனைவருமே ஒன்று கூடி குறிப்பிட்ட அமாவாசை புண்ணிய தினத்தில் ஆனந்தமுடன் நம்மைத் தேடி வருவதோடுமல்லாது, அவர்கள் நமக்கு எதிர்காலத்தில் சந்தோஷம் பெற வாழ்த்தவும் ஆசிகள் வழங்கி விடுவார்கள். அன்றைய தினத்தில் மகான்கள், மகரிஷிகள் கூட வந்து நம்மை ஆசிர்வாதம் புரிவார்கள் என்பது இந்து மத நம்பிக்கை.

நம் முன்னோர்கள் அனைவருமே திரண்டு வருவதால் அந்த அமாவாசை அன்று ஒரே லயமாகவும் வருவதால் "மகாலயம்" என அழைக்கப்பட்டு, பின்பு மக்கள் வழக்கில் மகாளயம் ஆகிவிட்டது என்றும் சொல்லப்படுகிறது.

மகாளய காலம் 15 தினங்கள் ஆக, வானுலகத் தேவர்கள்கொண்ட கணக்கீட்டின்படி, புரட்டாசி மாதம் என்பது, அவர்களுக்கு நடு இரவுப்பொழுதாகும். பூவுலகில், அமைதியான இந்த காலத்தில் தெய்வ வழிபாடு மற்றும் பித்ருக்களை துதித்து எண்ணி தர்ப்பணம், பூஜை, ஸ்நானம் புரிதல் போன்றவைகளை செய்ய உத்தமமானது என்று முன்னோர்கள் கூறி வைத்துள்ளார்கள்.

இந்த மகாளய காலத்தில் தர்மத்தின் காவலனாகிய எமதர்மன் எமலோகத்தில் உள்ள பித்ருக்களை அழைத்து "பூலோகம் சென்று வாருங்கள்!" என அனுமதி வழங்கிட, அவர்கள் மகிழ்ச்சியோடு, தங்கள் பிறந்ததான பூவுலகு நோக்கி ஆவலோடு ஒன்றுகூடி வருவார்களாம் இதுவரை பல காரணங்களால், தங்கள் சந்ததியர்களால் சிரார்த்தமாகிய திவசம் பெறாத பித்ருக்கள் இந்த மகாளய அமாவாசையன்றாவது தங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்காதா என்ற ஏக்கங் கொண்டு வருவார்களாம்!

மகாளய அமாவாசையன்று தர்ப்பணம், வேண்டுதல்கள் நிறைவேற்றியவர்களுக்கு, அவரவர் குடும்ப பித்ருக்கள் நல்லாசிகள் வழங்கிடுவதால், அந்தக் குடும்பங்கள் வாழ்க்கையில் பல நற்பலன்கள் பெறுவார்கள். அதனை ஒதுக்கித் தள்ளும் வாரிசு குடும்பங்கள் பித்ரு சாபம் பெற்று, அதனால் எதிர்காலத்தில் குடும்பங்களில் துன்பமான அனுபவங்கள், வேதனைகளை சந்திக்க நேரிடலாம்.

மகாளய அமாவாசையன்று வாய்ப்பு கிடைத்தால் புண்ணிய நதிகள், திருக் குளங்கள், கடலில் ஸ்நானம் செய்து, பித்ரு வழிபாடு செய்வது மிகச் சிறப்பானது. இதற்கு சூழ்நிலைகள் சாதகமாக இல்லாவிடினும், அவரவர் இல்லங்களில் நீராடி, சுத்த ஆடை உடுத்தி, பித்ருக்கள் கடன்களை நிறைவேற்றி நற்பலன்கள் பெற்றிடலாம்.

இந்த பிலவ ஆண்டில் மகாளய பட்ச தினம் 21.09.21 செவ்வாய் தொடங்கி 6.10.21 புதன் கிழமையில் முடிவடையும் (முறையே தமிழ் ஆவணி 5ம் தேதியும், புரட்டாசி 6ம் தேதியும்). அக்டோபர் 6ம் தேதி (2021) புதன் அமாவாசை, மாளய தர்ப்பணம் மற்றும் இதர தொடர்புடைய நிகழ்ச்சிகள் நடத்த வேண்டிய புண்ணிய தினமாகும்.




# கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர்

~ ரா. பன்னீர்செல்வம்

மதுரை, திருப்பரங்குன்றத்தில் உள்ளது திருக்கூடல் மலை. இதற்கு காகபுஜண்டர் மலை என்று மற்றொரு பெயரும் உண்டு! இங்குள்ள பக்தர்கள் இம்மலையை புஜண்ட மலை என சுகமாய் அழைக்கின்றார்கள்.

இந்த மலையில், நிறைய சித்தர்களின் ஜீவசமாதி அமைந்துள்ளது. குறிப்பாக, மலையினுடைய அடிவாரத்தில் அமைந்திருப்பது "சூட்டுக்கோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமிகள் ஜீவசமாதியாகும். இந்த மகான், கட்டிக்குளம் என்ற ஊரில் பிறந்தமையால் இவரது பெயரோடு ஊரின் பெயரான கட்டிக்குளம் இணைந்து, கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் என்றே அழைக்கப்பட்டு வருகிறார்.

கட்டிக்குளம் எங்குள்ளது? இந்த மாயாண்டி சித்தரின் வரலாறு என்ன?.. இவர் மகானாய் அறியப்பட்டது எப்படி? இவரது சிறப்புகள் என்ன? என்பதனை பார்ப்போம்! மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் உள்ளது, திருப்பாச்சேத்தி என்னும் பேரூர்! இங்கிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் அழகிய கிராமமே கட்டிக்குளம் என்னும் திருத்தலம்!



இந்தக் கட்டிக்குளத்தில் பற்பல ஞானியர் உலவி வந்ததோடு, ஞானியர்தம் ஜீவசமாதிகளும் அமையப்பெற்று புண்ணிய பூமியாய் விளங்குகின்றது. போக்குவரத்து வசதிகளே இல்லாத அந்தக் காலத்தில் ராமேஸ்வரத்திற்கு யாத்திரை செல்லும் பக்தர்களும் சாதுக்களும் இந்த ஊரின் வழியாகத் தான் செல்வர்! அப்படி செல்கின்ற யாத்திரிகர்கள் தங்கி இளைப்பாறவும் அவர்களின் பசி போக்கவும் திருமடங்கள் நிறைய அமைந்திருந்த இந்த கட்டிக்குளம் தர்மசிந்தனை நிறைந்த மாந்தர்களை கொண்டதாய் இருந்தது!

அந்தக் காலத்தில் அந்த ஊரில் இருந்த மாபெரும் மகான் தான் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமிகள். அவர் ஒரு அருட்சித்தர்! இவரது கையில் வைத்திருந்த சூட்டுக்கோல் நல்லோருக்கு நன்மைகள் அளித்ததோடு தீயவர்களுக்கு தண்டனை தருவதாகவும் அமைந்தது! ராமலிங்கம் சித்தர் இந்த அளவிலேயே அந்த சூட்டுக்கோலை பயன்படுத்தி, தனது அருட்சக்தியை வெளிப்படுத்தி வந்தார்கள். இவரது பெயர் சொல்ல வந்துதித்த மகான் தான், சூட்டுக்கோல் மாயாண்டி

சுவாமிகள் ஆவார்.

கட்டிக்குளம் என்னும் இந்த நல்லூரில் மண்பாண்டம் செய்யும் தொழிலில் தேர்ந்தவரான குப்பமுத்து வேளாளர்- கூத்தாயி அம்மாள் என்னும் தம்பதியினர் வசித்து வந்தனர். அதுமட்டுமல்லாமல் குப்பமுத்து வேளாளர், அவ்வூரில் இருந்த அய்யனார் கோவிலின் பூசாரியாக சேவை செய்து வந்தார். அதோடு, சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளின் தீவிர பக்தராக விளங்கினார்! குழந்தைப்பேறு இல்லாத குப்பமுத்து - கூத்தாயி தம்பதியினர் அவ்வப்போது சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளின் தரிசனமும் நல்லாசியும் பெற்று வந்தனர்.

சுவாமிகளின் அருட்பிரசாதம் பெற்றதினாலும் தம்பதியரின் தவப்பயனாலும் 1858 ஆம் ஆண்டு, ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் அவதரித்த குழந்தை தான் நமது மாயாண்டி சுவாமிகள் ஆவார். இறையருளால் ஈன்றெடுத்த அந்த ஆண் மகவிற்கு மாயாண்டி என்கிற பெயரிட்டார் குப்பமுத்து கருவிலேயே திருவருளும் குருவருளும் வாய்க்கப்பெற்ற இந்தக் குழந்தையின் இறை சக்தியை, மிக மிக இளவயதிலேயே, பெற்றோர் உணரும் வண்ணம் ஓர் நிகழ்வு உண்டானது!
சிறுவனாக இருந்த மாயாண்டியை, தான் வழக்கமாக பூஜை செய்யும் அய்யனார் கோவிலுக்கு அழைத்துச் செல்வார், குப்பமுத்து. ஒருநாள், பூஜைக்கு சென்ற குப்பமுத்து, உடன் வந்த சிறுவனான மாயாண்டியை கோவிலின் வெளிக் கூடத்திலே அமர வைத்துவிட்டு, பூஜை செய்ய, உள்ளே சென்றுவிட்டார் பூஜைகளை முடித்த குப்பமுத்து, நீண்ட நேரம் கழித்து வெளியே வந்து பார்த்து, அதிர்ச்சியுற்றார். குத்துக்காலிட்டபடி தியானத்தில் அமர்ந்திருந்த சிறுவன் மாயாண்டியின் உடலை ஒரு பெரிய நாகம் சுற்றியிருந்தது மாயாண்டியின் தலைமீது குடைபிடித்தது போல படமெடுத்து நின்றது நாகம். தன் அருமை மகன் இப்படி பாம்பின் பிடியில் இருப்பதைப் பார்த்து, தந்தையான குப்பமுத்து பேரதிர்ச்சி அடைந்தார். மகனுக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால்'.?... குப்பமுத்துவுக்கு ஈரக்குலையே நடுங்கியது.

"ஐயனாரப்பா'. என் மகனை காப்பாத்து",
என, கருவறையை நோக்கி, பெருத்த குரலெடுத்துக் கத்தினார். அப்போது தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது அந்த நாகம் கணப்பொழுதில் காணாமல் போயிருந்தது அதே நேரம், மாயாண்டியும் தியானத்திலிருந்து மீண்டிருந்தான். அப்படியென்றால்" இதுவரை, தியானம் செய்த மாயாண்டிக்கு பாதுகாப்பாய் குடை பிடித்திருந்ததோ அந் நாகம்! மாயாண்டியின் இறை சக்தியை உணர்த்தத்தான் இந்த சம்பவம் நிகழ்ந்தது என்று மெய்சிலிர்த்தார் குப்பமுத்து!
இப்படியே அடுத்தடுத்து நடந்த சில நிகழ்வுகளால் சிறுவன் மாயாண்டியின் இறைநிலையை ஊர் மக்கள் அறியத் தொடங்கினர்.

சிறுவன் மாயாண்டியின் பள்ளிப் படிப்போடு ஆன்மீகத் தேடலும் வளர்ந்தது அதே நேரத்தில், வீட்டில் இருந்த பரம்பரைச் சொத்தான வைத்திய ஓலைச் சுவடிகள், சித்தர்களின் நூல்கள் அனைத்தையும் ஆர்வமுடன் பயின்றார் மாயாண்டி! இதன் விளைவாக'....
காலை, மாலை இருவேளையும் மதுரைக்கு சென்று மீனாட்சி அம்மனையும் ஆலவாய் அப்பனையும் தரிசனம் செய்வது மாயாண்டி சுவாமிகளின் வழக்கமானது!
இந்த நேரத்தில் தான், வாலிபம் வந்தேறிய மாயாண்டி சுவாமிகளுக்கு உறவுப் பெண்ணான மீனாட்சியை திருமணம் செய்து வைத்தனர், பெற்றோர். மாயாண்டி மீனாட்சி தம்பதியரின் இனிய இல்லற பயனால் ஓர் ஆண் மகவும் பெண் மகவும் வந்துதித்தது! ஆயினும் மாயாண்டியின் உள்ளமோ ஆன்மீக பாதையை நோக்கியே நடை போட்டது!
ஒரு முறை பழனி யாத்திரை செல்ல பணம் இல்லாததால் தன் மனைவியின் தங்க நகைகளை விற்றார். அந்தக் கற்புக்கரசியாம் மீனாட்சியும் கணவனின் விருப்பத்திற்கு மாறாக நடந்ததே இல்லை.

அதே வேளையில், ராமேஸ்வரம் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு, தன்னிடம் இருந்த பணத்தை செலவிட்டு அன்னதானம் செய்து வந்தார்.

இறைவன், மனிதர்களை படைக்கும் போதே,

அவரவர்க்கு அவதார நோக்கம் என ஒன்றை படைத்து தான் அனுப்புவான். அவ்வாறே, மாயாண்டி சுவாமிகளை இறைவன் எதற்காக படைத்தான் என்பதை அவன் மட்டுமே அறிவான். அதனால் தான்' இல்லறம் அமைந்து, இனிதாய் இரு மகவுகள் பிறந்தும் மாயாண்டி சுவாமிகளின் இதயமெல்லாம் இறைவனை நோக்கியே ஏங்கியது!

தவநிலை, யோகநிலை அனைத்தும் வசமாகி இறைவனை அடைய வேண்டும் அதற்கு தீட்சை பெற வேண்டும் யாரிடம் தீட்சை பெறுவது?...

அந்த சமயத்தில்தான் ராமேஸ்வர யாத்திரை செல்லும் வழியில், திருவாக்கூர் செல்லப்பா சுவாமிகள் என்பவர் கட்டிக்குளம் வந்தார். அவரே மாயாண்டி சுவாமிகளின் ஞான குருவாய் இருந்து உபதேசம் செய்து ஞான குருவானார்.

துறவறத்தின் திறவுகோல் கிடைத்ததை எண்ணி, ஆனந்தமுற்ற மாயாண்டி சுவாமிகளை இல்லத்தாரும் சுற்றத்தாரும் துறவறம் செல்ல விடவில்லை. ஆனாலும் ஆண்டவன் சித்தப்படி வீட்டை விட்டு வெளியேறி துறவு மேற்கொண்டவர், பற்பல புண்ணிய தலங்களுக்கு சென்று இறை தரிசனம் கண்டார். ஆனால், அவரை ஈர்த்தது என்னவோ மீனாட்சியும் சுந்தரேஸ்வரரும் தான்.

எனவே, இறுதியாக'. திருப்பரங்குன்றத்தில் உள்ள காகபுஜண்டர் மலைக்கு வந்தவர், அங்கிருந்த சித்தர் பெருமக்களோடு கலந்து பேசினார். இந்த காகபுஜண்டர் மலையிலேயே தங்கி முக்தியடைய விரும்பினார், மாயாண்டி சுவாமிகள்! திடீரென ஒருநாள்''.. திருப்பரங்குன்றத்திற்கு சென்று முருகப்பெருமானை தரிசித்து, அன்று இரவு அங்கேயே'.. அதாவது, சரவணப் பொய்கையில் கண்ணயர்ந்தார்.


விடிந்ததும் சரவணப் பொய்கையில் நீராடி, குளத்தின் ஈசானிய மூலையில் மூழ்கி முருகனை மனதால் நினைத்து, மண் எடுத்தார்.

அந்த மண்ணில் ஒரு சிவலிங்கம் செய்தார். தான் மண்ணால் உருவாக்கிய அந்த சிவலிங்கத்தை புஜண்ட மலையில் தான் தங்கியிருந்த குகையில் பிரதிஷ்டை செய்தார். அது முதற்கொண்டு, இந்த புஜண்ட மலை பிரசித்தியும் இறை சக்தியும் மிளிரப் பெற்றதாய் அமைந்தது.

ஆயிரக்கணக்கில் திரண்ட பக்தர்களுக்கு, தன் வேலைகளால் சிறப்பான எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்த மாயாண்டி சுவாமிகள், நல்லதொரு நாளில் முக்தியடைந்தார்.

எவருடைய அருளால் இறைசக்தி பெற்றாரோ அந்த ராமலிங்கம் சுவாமிகள் வைத்திருந்த சூட்டுக்கோல், அவருடைய உண்மை சீடரான கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகளின் ஜீவ சமாதியில் இன்றும் உள்ளது. எனவே தான் கட்டிக்குளம் சூட்டுக்கோல் ஸ்ரீ மாயாண்டி சுவாமிகள் என புகழுடன் அருள்புரிகிறார்.

இறையன்பர்கள், காகபுஜண்ட மலை எனப்படும் திருக்கூடல் மலைக்கு சென்று, இன்றுவரை அற்புதங்கள் செய்கின்ற மாயாண்டி சித்தரையும் அந்த சூட்டுக் கோலையும் தரிசனம் செய்து, உயர்வான வாழ்க்கையை அடைவோம்.



# கல்விக் கடவுள் கலைமகள்!

~ இரா.சு



அலைமகள், கலைமகள், மலைமகள் என சிறப்புப்பெயர் கொண்ட தேவிகளாக முறையே லட்சுமி தேவி, சரஸ்வதி தேவி, பார்வதி தேவி திகழ்கிறார்கள்.

கல்வி உள்ளிட்ட அனைத்து கலைகளுக்கும் உரிய சரஸ்வதி பற்றிய தொகுப்பு செய்திகள் இவை.

சிவாலயங்கள், வைணவ ஆலயங்கள், புத்த, ஜைன ஆலயங்கள் இவற்றிலும், ஏன், பிற நாடுகளிலும் கூட "சரஸ்வதி வழிபாடு உள்ளது.
கந்த புராணத்தில் காணப்படும் குறிப்பொன்றில் அனைத்து உயிர்களின் "நா" விடத்தில்" அன்னை சரஸ்வதி குடி கொண்டுள்ளாள் எனக் காணக் கிடைக்கிறது.

அதுமட்டுமின்றி, பிரம்மதேவனின் நாவில் வீற்றிருக்கும், கலைமகள் பிரம வித்தையை தன் முகமாயும், நான்கு வேதங்களைக் கரங்களாகவும், எண்ணையும், எழுத்தையும் கண்களாகவும், இசையையும், இலக்கணத்தையும் இரு தனங்கள் ஆகவும், இதிகாச புராணங்களை திருவடிகள் ஆகவும், ஓங்காரத்தை யாழ் எனப்படும் வீணையாகவும் ஏற்று விளங்குவாள்.

ஆன்மாக்களுக்கு ஞானத்தை அருளும் இந்த வெண் தாமரையாள் ஆசைகள் பஸ்மமாவதை உணர்த்தும் நெற்றிக் கண்ணையும் கொண்டவள்.
சப்தமாதர்களில் ஆறாவது வரிசையில் இடம்பெற்ற கலைமகளை" ஆற்றங்கரை சொற்கிழத்தி என்று புலவர் ஒட்டக்கூத்தர், போற்றிப் பாடுவார்."

உலகத்துண்டாக்கிய 64 கலைகளையும், அறிவிற்கு பொருந்துமாறு உணரவைக்கும் என் தாய், வெண் பளிங்கு போன்ற தூய வடிவு கொண்டவள், இத்தகைய கலைமகள் என் மனதினுள்ளே வீற்றிருப்பாள். ஆகவே அடியேனுக்கு எவ்வகை இடையூறும் வராது "என்ற பொருள் கொண்ட வெண்பாவை தனது" சரஸ்வதி அந்தாதி" நூலின் காப்புச் செய்யுளாக வைத்து போற்றி வணங்குகிறார், ஒட்டக்கூத்தர்.

"ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல் வாளென் னுள்ளத்தி
னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்" என்று.

காளிதாசர், ஸ்ரீ ப்ருஹஸ்பதி, ஸ்ரீ ஆதி

சங்கரர், ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் போன்ற பலர் சரஸ்வதியைப் போற்றி தோத்திரங்களை வடமொழி நூற்களில் படைத்துள்ளனர்.

நம் தமிழ் மொழியில் கவிச்சக்கரவர்த்தி கம்பருடன், ஸ்ரீ குமரகுருபரர், கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர், ஒப்பிலாமணி தேசிகர், யஜுர் வேதி சீநிவாசஅய்யர்,
அருணாசலகவிராயர், ஆனந்தக் கூத்தர், சம்பந்த முனிவர், திரிகூட ராசப்ப கவிராயர், நிரம்ப வழகிய தேசிகர், களந்தை ஆதியப்பனார், வரகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார், வண்ண சரபம் தண்டபாணி சுவாமிகள், பாலகிருஷ்ண தீட்சிதர், காளமேகப புலவர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற பல மகான்கள், புலவர்கள், நூலாசியர், கவிஞர்கள் என எண்ணற்றவர்கள் கலைத் தேவிக்கு பல போற்றி நூல்களை இயற்றித் தந்துள்ளனர். இந்த பட்டியல் முடிவடையாது நீண்டு கொண்டே போகும்.

சரஸ்வதி பூஜையின் தத்துவம் குறித்து ஒரு நூலில் இப்படி விளக்கப்பட்டுள்ளது.

"அன்னை கலை மகளின் அனுக்கிரகத்தை நாடி கோருபவன் வல்லமை சக்தியை பெற்று விடுவான். அத்தகைய நபருக்கு புல் கூட ஒரு ஆயுதமாகி விடும். அந்த ஆயுதத்தை சரிவர பயன்படுத்துபவனே தேவிக்கான ஆயுத பூஜை செய்ய விரும்புவான். அப்பேர்ப்பட்டவன் ஆண்டுக்கு ஒரு முறை ஆயுதத்தை தேவி பூஜையில் வைத்து வழிபடுவது மிக்க நன்று. சிலர் தங்கள் மரபுபடி நவமி திதியன்று சுவடிகளில் (புத்தகமும்) கல்வி தெய்வத்தை ஆவாஹணம் செய்து சரஸ்வதியை பிராத்தனை செய்து கொள்வார்கள்.

புரட்டாசி மாத நவராத்திரி தினத்தில் வரும் மூல நட்சித்திர தினத்தில், திருவாவடுதுறை ஆதீனத்தில் தங்கள் ஆதீனத்தில் உள்ள தொன்மை பொருந்திய ஏட்டுச் சுவடிகளில் தேவி சரஸ்வதியை எழுந்தருளச் செய்து மூன்று தினங்களும் பூஜிப்பது வழக்கமாக கடைபிடிக்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக விஜயதசமி நாளன்று ஏட்டிற்கு புனர் பூஜை செய்து முடித்தவுடன், குரு மகா சன்னிதானம் அவர்கள் குரு பாதுகையினை தங்கள் சிரசின் மீது வைத்து அங்குள்ள ஸ்ரீ நமசிவாய மூர்த்தி திருக்கோயிலை வலம் வந்து வழிபடுவார்.

கலை மகளுக்கு புரட்டாசி, சித்திரை மாதங்களில் இடம் பெறும் நவராத்திரி நாட்கள், பௌர்ணமி திதி தினம், சோம வார விரதம், அநந்த திரிதியை திதி, விரதம், செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமை விரதம், ரச கல்யாணி அநந்த திருதியை யோடு கூடிய தினம், ஆருத்திரா திருவாதிரை நட்சத்திரத்துடன் திருதியை திதி கூடி வரும் தினம். வெவ்வேறு தியான மந்திரங்களால் துதிக்கப்படும் கலைமகள் கொண்ட திருநாமங்களாக, மகா சரஸ்வதி, ஸ்ரீ வித்யா தேவி, சரஸ்வதி, ஸ்ரீ தத்துவநிதி வாகீஸ்வரி, ககாரத் தேவதை வாணி, பிராம்ஹி, சுத்த வித்யா, பகவதி சரஸ்வதி, ஹம்சவாஹினி, மயூர வாஹினி, தாராவான நீல சரஸ்வதி, பாலா சரஸ்வதி, ராஜ மாதங்கி, தாரணா சரஸ்வதி, பரா சரஸ்வதி, ருத்ர வாஹீஸ்வரி, விஷ்ணு வாஹீஸ்வரி, வாசஸ்பதி வாஹீஸ்வரி, நகுலி சரஸ்வதி, மேதா தாரண சரஸ்வதி, என பலப்பல உள்ளன.

சமண ஆகம வழிபாட்டில் முக்கிய இடம் பெறும் சரஸ்வதியை சுருதி தேவி, வாக் தேவி, சரஸ்வதி ஜினா ஐஸ்வர்யா, சோடசா வித்யா தேவி எனவும் வழங்கப்பட்டு பூஜிக்கப்படுகிறாள்.

பௌத்த சமயத்தினர் சரஸ்வதி தேவியை தங்கள் வழிபாட்டில் இணைத்துக் கொண்டு, அத்தேவியை இசைக்கும், சுபிட்சத்துக்கும், கலைகள் அனைத்திற்கும் அதிபதியாக ஏற்று போற்றுவார்கள்.

புத்த சமயத்தில் கலைமகள் மகா சரஸ்வதி, வஜ்ர சாரதா, ஆர்ய சரஸ்வதி என்ற பெயர்களால் பூஜிக்கப்படுவாள். இந்து சமயத்தினரின் தந்திர நூலில் இத்தேவி மூன்று முகங்களும், ஆறு கரங்களும் கூடிய மஞ்ஜீஸ்ரீ என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுளாள்.

இன்றும் கூட ஜாவா, ஜப்பான், பாலி, திபெத் போன்ற நாடுகளில் கலைமகள் வழிபாடு நடைபெறுகிறது.

பாலித் தீவுப் பகுதியில் உள்ள இரண்டு மலைகளுக்கும் நடுவே அமைந்த பள்ளத்தாக்கில்

இருக்கும் "தம்பாக்ஸரிவ்" என்ற பெரிய திருக்குளம் உள்ளது. மக்கள் அங்கு சென்று அக்குளத்தில் நீராடி முடித்து, தாங்கள் கொண்டு செல்லும் புத்தகங்களை அங்கு வைத்து வணங்கி மஞ்சள் நிற உணவினை நைவேதித்து மற்றவர்களுக்கு பிரசாதமாக வழங்குவார்கள்.

ஜப்பானியர்கள் வீணை, புத்தகம் கொண்ட சரஸ்வதியை "பென்-டென்" என பெயரிட்டு வணங்க, திபெத்தியர்கள் தேவியை "யங்-சனம்" என்ற பெயரிட்டு துதிக்கிறார்கள்.

வெவ்வேறு தலங்களில் சரஸ்வதி இரண்டு கரங்கள் கொண்ட தேவியாகவும், நான்கு கரங்கள் உள்ளவளாயும், ஆறு கரங்கள் படைத்தவளாயும், பத்துக் கரங்கள் உள்ளவளாயும் தோற்றமளித்து குடி கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கலைமகள் தனித்தனி வடிவு குறித்து ஸ்ரீ காசியப சிற்ப சாஸ்திரம், மான சாரம் சிற்பநூல், ஸ்ரீ தத்துவநிதி சிற்ப நூல், வாகீஸ்வரி சில்பரத்தின நூல் போன்ற நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.
கும்பகோணம் - காரைக்கால் சாலை மார்க்கத்தில் 35வது கி.மீ தூரத்தில், அன்னை சரஸ்வதிக்கென்று தனிக் கோயில் உள்ளது. "ஞான சரஸ்வதி" என்று வழங்கப்படும் இத்தேவியை ஒட்டக்கூத்தப் புலவர் வழிபாடு செய்து நற்பேறு பெற்றுள்ளார்.

நம் நாட்டில் உள்ள பல ஆலயங்களில் கலைமகள் தனிச் சந்நிதி கொண்டோ அல்லது மற்ற தேவதைகளோடு பிரகாரத்திலும், பல மண்டபத் தூண்களிலும், கோபுரங்களிலும் திருக் காட்சி அருள்கிறாள்.

"வெண்மலரும் வெண்பணியும் வெண்
கலையும் வெண் மணியும் வேய்ந்து வாச
வெண் கமலம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்து வண்டு விளரி பாடக்
கண்மலரு மாயிரந்தோ டவிழத்து முகை
நெகிழ்ந்த கம லத்தில் வா ழென்
கண்மலருஞ் சதுர் முகத்தோன் நாவில் வளர்
வாணி பதங் கருத்துள் வைப்போம்."

என மச்சப்புராணம் வர்ணிக்கும் ஸ்ரீ சரஸ்வதி தேவியை என்றும் போற்றி வணங்கி அனைத்து பேறுகளையும் பெறுவோம்!



# ஆரோக்கியமளிக்கும் மூலிகைகள்!

~ கீதாமணி

## சுண்டைக்காய்

நம் பேச்சு வழக்கில் "அவன் கிடக்கிறான் சுண்டைப் பயல்" என்று ஏளனமாக சொல்வதுண்டு. ஆனால் செடி வகையைச் சேர்ந்த சுண்டைக்காய் கொண்ட மருத்துவ குணம் பலருக்கு தெரியாமல் இருக்கலாம்!
நமது நெஞ்சில் அடிக்கடி உருவாகும் கபம், பித்தத்தால் விளையும் ஏப்பம், சுவையின்மையும் உடல் சூட்டால் விலையும் மூலம், ஜீரணமின்மை, வயிற்றுப் புழுக்கள் இவை அகன்று நிவாரணம் பெற சுண்டைக்காய் அருமருந்தாகிறது.



சுண்டை வற்றலுடன் மிளகு, சீரகம், கருவேப்பிலை, வெந்தயம் சேர்த்து லேசாக வறுத்து விட்டு அதனுடன் உப்பு சேர்த்து அவைகளை பொடி செய்து உணவுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் நுண்புழுக்கள், மூல வியாதி, ருசியற்ற தன்மை, பசீர் மந்தநிலை அடியோடு போய்விடும்.

வாத, பித்த, கப நோய்கள் குணமாக, சுண்டை வேர், தும்பை வேர், இலுப்பைப் புண்ணாக்கு இந்த மூன்றையும் சம எடை எடுத்து முகர்ந்து வந்தால் பித்த, கப நோய்கள் குணமாகி விடும்!

## கொத்தமல்லி

குறைந்த விலையில் அதிகம் கிடைக்கும் மல்லியில் வைட்டமின் சி (ஊ) கிடைக்கிறது.
நமக்கு வாய் துர்நாற்றம் வரும்போது கொத்தமல்லி விதையை வாயில் இட்டு கொஞ்ச நேரம் மென்று வந்தால் போதும். அது வாய் துர்நாற்றத்தை நீக்கிவிடும்.



கொத்தமல்லி இலையை நல்லெண்ணெய் விட்டு வதக்கி, அதனை வீக்கங்கள், மீது கட்டி வர, அது கரைந்து விடும்.
கொத்தமல்லி இலையை நீர் விட்டு அரைத்து ஈரமாக்கி உணவுடன் கலந்து சாப்பிடலாம். கொத்தமல்லி விதைகளை பொடி செய்து மூலிகை தேநீராகவும் அருந்தலாம்.

நமக்கு உண்டாகும் சுவையின்மை, பித்தம் மூலம் வரும் காய்ச்சல், அஜீரணம் வலிப்பு, இதய பலவீனம், தலைச்சுற்றல், ஆண்மை குறைவு, வயிற்று வலி இவை அகல, கொத்தமல்லி ஒரு சிறந்த நோய் நிவாரணி ஆகும்.

# தியாகராஜ அமிர்தம்

~ பிரபு சங்கர்



"இப்படி ஓர் ஆனந்தமான பைரவியை பிறர் பாடி, நான் அனுபவித்ததே இல்லை," மனப்பூர்வமாகச் சொல்லிக் கொண்டார் தியாகராஜர்.

கும்பகோணம் அருகிலுள்ள திருபுவனம் என்ற ஊரில் நடைபெற்ற சுவாமிநாத ஐயரின் கச்சேரியைக் கேட்டுவிட்டுதான் இப்படி மனதுக்குள் அவர் பாராட்டினார்.

அந்த காலத்தில் இசை ஞானியாகப் புகழ் பெற்றிருந்த தியாகராஜர் கண்மூடி, மெய்மறந்து தன் ஆனந்த பைரவியை ரசிப்பதை மேடையிலிருந்தவாறே கவனித்து விட்ட சுவாமிநாத ஐயர் கொஞ்சம் பயப்பட ஆரம்பித்தார். ‘இவர் இப்படி ரசிப்பது உண்மையென்றால், நான் நன்றாகப் பாடுகிறேன் என்றுதான் அர்த்தம். அதேபோல என் பாடலில் அபஸ்வரம் தட்டினால் அதையும் இவர் சுட்டிக்காட்டத்தானே செய்வார்!’ என்ற பயமும் எழுந்தது.

ஆனால் கச்சேரி முடிந்ததும் தியாகராஜர் மேடை ஏறிச்சென்று சுவாமிநாத ஐயரை உளமாறப் பாராட்டினார், அவருடைய இசை ஞானத்தைப் பெரிதும் போற்றினார்.
இந்த சந்தர்ப்பத்தை சுவாமிநாதன் வெகு குரூரமாகப் பயன்படுத்திக் கொண்டார். அவர் தியாகராஜரிடம் தனக்கு ஆசிர்வாதமாக ஒரு வரம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

என்ன வரம் அது?
‘இனிமேல் தியாகராஜர் ஆனந்த பைரவி ராகத்தில் கீர்த்தனை எதுவும் இயற்றக் கூடாது’ என்பதுதான்!
அவையோர் அதிர்ந்து போய் சுவாமிநாதனை ஏச முனைந்தபோது தியாகராஜர் அமைதியாகச் சொன்னார்: ‘வரம் தந்தேன்!’ வாக்களித்தபடி அன்று முதல் அவர் ஆனந்த பைரவியுடன் தன் உறவைத் துண்டித்துக் கொண்டார். அதற்கு முன் அந்த ராகத்தில் அவர் பாடிய, ‘ராம ராம நீ வாரமு’, ‘க்ஷீரசாகர விஹாரா, ‘நீகே தெலியக’ ஆகிய மூன்று கீர்த்தனைகள் கூட அவரது சீடர்கள் வாய்வழியாக வந்து இன்றும் ஒலித்து வருபவைதான்.

தியாகராஜரின் பூர்விகம் ஆந்திர மாநிலம். 1600ம் ஆண்டு அவருடைய மூதாதையர் தமிழ்நாட்டில், திருவையாறில் வந்து குடியேறினார்கள். 1767, மே மாதம் 4ம் தேதி தியாகராஜர் அவதரித்தார். தந்தையார் ராமபிரும்மம், தாயார் சீதம்மா. பெற்றோருக்கு இயற்கையிலேயே இசை ஞானமும் குரல் வளமும் இருந்தன. அவையே தியாகராஜரின் பிறவிச் சொத்தாக வந்து சேர்ந்தன.

அந்த விளையும் பயிரின் அருமை முளையிலேயே தெரிந்தது. சுவரையே சுவடியாகக் கொண்டு தியாகராஜர் பல பாடல்களை இயற்றி எழுதி வைத்தார். அந்தப் பாடல்களின் பொருளும், நயமும் பெற்றோரைப் பரவசப்படுத்தின. அவர்களை மட்டுமா, பின்னளில் அவருக்கு குருவாக அமைந்த ஸொன்டி வெங்கட ரமணய்யாவும்தான்! இவர்களோடு, புதுக்கோட்டை சமஸ்தானம் முழுவதுமே

தியாகராஜரின் ஆற்றலைத் தெரிந்து கொண்டு பிரமித்தது.
அவருடைய ஆற்றல் உலகறிய வெளிப்படுத்திய ஒரு சம்பவம் -
புதுக்கோட்டை அரண்மனையில் ஒரு போட்டி. சபை நடுவே ஒரு குத்து விளக்கில் எண்ணெயும், திரியும் இடப்பட்டிருந்தன. தீபம் ஏற்றப்படவில்லை. சபைக்குத் தன் குருநாதருடன் வந்திருந்த தியாகராஜரைப் பார்த்து மன்னர் சொன்னார்: 'உம் இசையறிவை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதன் மகிமையை அனைவரும் புரிந்து கொள்ள உமக்கு ஒரு வாய்ப்பு தருகிறேன். அதாவது இந்த குத்து விளக்கில் நீர் தீபம் ஏற்ற வேண்டும். கையாலோ, தீ எடுத்தோ அல்ல, உம் இசையால்! அந்த வல்லமையை நாங்கள் அனைவரும் காண வேண்டும்..'
தியாகராஜர் மெல்ல எழுந்தார். குருநாதரை வணங்கி ஆசி பெற்றார். விளக்கின் முன் சென்று அமர்ந்தார். ஜோதி ஸ்வரூபிணி ராகத்தில் ஒரு பாடல் தென்றலை சபையில் செலுத்தினார். பொதுவாகவே ஜ்வாலையை அலைக்கழிக்கும் குணம் காற்றுக்கு உண்டு. ஆனால் தியாகராஜரின் இசைத் தென்றல் பளிச்சென்று ஜ்வாலை உருவாக்கி திரிக்கு உயிர் கொடுத்தது!
அரங்கமே ஒளி வெள்ளமாய் பிரகாசித்தது. மன்னர் தன் சிம்மாசனத்தை விட்டெழுந்து இறங்கி வந்து தியாகராஜரின் கரங்களைப் பிடித்துக் கொண்டு மனம் நெகிழ்ந்தார்.

---

ராமரிடம் தியாகராஜர் கொண்ட பிரேமைக்கு எல்லையே இல்லை. இருபத்தோரு ஆண்டுகளில் 96 கோடி முறை ராமநாப ஜபம் செய்த பரம பக்தர் அவர். தன் தந்தையார் தமக்களித்த ராமர் விக்ரகத்தோடு பேசி, பழகி, அதனோடு மிகவும் ஒன்றிப் போனார். அவர் அந்த விக்ரகத்துடன் ஜபழகும்ஜ விதத்தைப் பார்ப்பவர்கள் அவரை பித்தர் என்றே வர்ணித்தார்கள், கேலி பேசினார்கள்.

ராம விக்ரகத்துடன் பேசுவதும், பாடுவதும், அதனைத் தோளில் சுமந்து கொண்டு ஆடுவதும்.... ராமர் தன்னுடன் பேசுவதாகவே பாவித்துக் கொண்டு இவர் குதூகலிப்பது பிறருக்கு பைத்தியக்காரத்தனமாகத் தோன்ற, அவருடைய அண்ணன் ஜப்யேசன், அவரை எதற்கும் உதவாதவர் என்று கருத ஆரம்பித்தார். பிறகென்ன? தனக்குத் தெரிந்த வித்தையை வைத்து பொருள் ஈட்டத் தெரியாத மூடராக இருக்கிறாரே தியாகராஜர் என்று நொந்து கொண்டார். நாலு இடங்களில் கச்சேரி செய்தோம், பணம் சம்பாதித்தோம், குடும்பத்துக்குக் கொடுத்தோம் என்று இல்லாமல் பொறுப்பற்ற வகையில் இந்த விக்ரகத்தை வைத்துக் கொண்டு காலத்தை வீணாக்குகிறாரே என்று கோபமும் கொண்டார்.

விக்ரகம் இருப்பதால்தானே இப்படி பைத்தியம் முற்றிப் போகிறது? அதையே இல்லாமல் செய்து விட்டால்? உடனே தியாகராஜருக்குத் தெரியாமல் அந்த விக்ரகத்தை எடுத்து காவிரி நதியில் வீசிவிட்டார்.
ஜராமரைஜக் காணாமல் பரிதவித்துப் போனார் தியாகராஜர். பெருங்கூச்சலிட்டு அழுதார். அவருடைய துயரத்தை விவரிக்கவே இயலவில்லை. எல்லா இடங்களிலும் போய்த் தேடிப் பார்த்தார். அங்கெல்லாம் ஏமாற்றம் அவரைச் சந்திக்கவே மனம் நொந்தார். மிகவும் உருக்கமாக, ஜஎந்து தாகினாடோ....' என்று பாடிக் கதறினார்.

ஆனால் ராமருக்கும் அவரை விட்டுப் போக விருப்பமில்லை. அவருடைய கனவில் தோன்றி, தான் காவிரி நதியில் எந்தப் பகுதியில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்தார். உடனே ஆற்றை நோக்கிப் பாய்ந்தோடினார் தியாகராஜர். கனவில் கனகராமன் குறிப்பிட்ட இடத்தில் மூழ்கித் தேடினார். கண்டார் ராமனை் பெருமகிழ்ச்சியோடு விக்ரகத்தை வீட்டிற்குக் கொண்டு வந்து பழையபடி அதனுடனேயே நேரத்தை செலவிட்டார். தமையனார் ஜப்யேசன் ராம கருணையைக் கண்டு வியந்து தன் செயலுக்காக வெட்கப்பட்டார்.

---

தஞ்சாவூரில் வித்வான்கள் சபை களை கட்டியிருந்தது. அங்கே இரண்டு மணி நேரம் இசைக் கச்சேரி செய்ய தியாகராஜர் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் அவர் ஒரு கட்டத்தில் எடுத்த காம்போதி ராகம் நேர எல்லைக்கு

உட்படுவதாக இல்லை. அந்தப் பிரவாகம் பன்னீர் மணமாய் பரவி, நிரவி, அனைவரையும் ஆட்கொண்டது. இரவு எட்டு மணிக்கு காம்போதியில் இறங்கியவர்கள் ஏற்கெனவே நிர்ணயித்தபடி மணி பத்துதான் ஆகியிருக்கும் என்ற உணர்வோடு, உலக நினைவுக்கு பெற்றார்கள். ஆனால், கடிகாரம், அது காலை நான்கு மணி என்றது!

இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட சரபோஜி மகாராஜா, தியாகராஜருக்கு, ஆஸ்தான வித்வான் என்ற அந்தஸ்தைக் கொடுக்க விரும்பினார். அவரிடம் தகவல் தெரிவிக்குமாறு தன் அரசவை பிரதானிகர்களை அவரிடம் அனுப்பினார்.

தியாகராஜர் பணிவுடன் அந்த அழைப்பையும் அரச மரியாதையையும் ஏற்காமல் ஒதுங்கினார். அரசக் கலைஞர் என்றால் மன்னர் விரும்பும் நேரத்திலெல்லாம் பாட வேண்டும், இசை ஞானசூன்யங்கள் முன்னால் தம் திறமையை வீணாக்க வேண்டும். க்ஷராமனைப் பாடும் வாயால் ஒரு நரனைப் பாடுவேனோ?' என்று கேட்டு வந்தவர்களைத் திருப்பி அனுப்பினார்.

இதைக் கேட்டு வெகுண்டார் மன்னர். அவரைக் கட்டி இழுத்து வந்து தம் முன் நிறுத்துமாறு வீரர்களுக்கு ஆணையிட்டார். வீரர்கள் தியாகராஜர் வீட்டிற்குச் சென்று அவர் மீது கை வைக்கும் முன்னாலேயே இங்கே மன்னருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. இது அந்த ராம பக்தனுக்குக் கொடுமை இழைக்க நினைத்த தனக்கான தண்டனைதான் என்பதைப் புரிந்து கொண்ட மன்னர், உடனே தியாகராஜருக்கு எந்த பாதிப்பும் எந்த மன உளைச்சலும் ஏற்படுத்திவிட வேண்டாம் என்று தன் வீரர்களுக்கு மறு உத்தரவு பிறப்பித்து அவர்களைத் திரும்ப வரச் செய்தார். தியாகராஜர் வீட்டை விட்டு அவர்கள் கீழே இறங்கியதும், மன்னரின் வயிற்றுவலியும் இறங்கி காணாமல் போய்விட்டது!

---

பாடல்கள் மட்டுமன்றி ஒரு நாடகமும் எழுதியிருக்கிறார் தியாகராஜர். 'நௌகா சரித்ரம்' என்று தலைப்பிடப்பட்ட அந்த தெலுங்கு நாடகத்தை சான்றோர் பேரவை ஏற்க மறுத்தது. கோபிகைகளின் கர்வத்தை ஸ்ரீகிருஷ்ணன் அடக்குவதாகிய அந்த சம்பவம், புராணத்தில் இல்லை என்று அவர்கள் வாதிட்டார்கள். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட மூலத்திலிருந்துதான், அந்தக் கருத்தை வைத்துதான் எழுத வேண்டுமே அல்லாது சொந்த கற்பனையாக எழுதி புராணத்தை அவமதிக்கக் கூடாது என்று அவர்கள் திட்டவட்டமாக மறுத்தார்கள்.

தியாகராஜர் மனம் வருந்தினார். இத்தனைக்கும் சபையில் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு அந்தக் கற்பனை வளமும், நயமும் மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் பொறாமை கொண்ட சில வித்வான்கள், சபையின் முக்கியஸ்தர்களாகவும் அமைந்து விட்டதால், பாராட்டியவர்களாலும் அவர்களை எதிர்த்துப் பேச முடியவில்லை.

ஆனால், தியாகராஜரின் சீடரான வெங்கடரமண பாகவதர், தன்னிடம் 'நௌகா சரித்திரக்ஷத்தின் மூலமான சமஸ்கிருத வடிவம் ஓலைச் சுவடியாக இருக்கிறது என்றும், அதைத் தான் தேடி எடுத்து மறுநாள் சபைக்கு சமர்ப்பிப்பதாகவும் கூறினார்.

எல்லோருக்கும் மேலாக தியாகராஜர் திகைத்துப் போனார். 'அது எப்படி சாத்தியம்? நான் எழுதியது முழுக்க, முழுக்க என் சொந்த கற்பனையால் அல்லவா? அதற்குப் புராண ஆதாரமே கிடையாதே' என்று பிரமித்து நின்றார்.

மறுநாளே, சீடர் அந்த ஓலைச் சுவடிகளைக் கொண்டு வந்து சபையில் சமர்ப்பித்தார். ஏதும் புரியாமல் குழப்பத்துடன் நின்றிருந்த தியாகராஜரிடம் வந்த சீடர், க்ஷஉங்களிடம் அனுமதி பெறாமலேயே நான்தான் உங்கள் நாடகத்தை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து ஓலைச் சுவடிகளிலும் ஏற்கெனவே எழுதி வைத்திருந்தேன். அவ்வாறு செய்ய வேண்டும் என்று ஸ்ரீராமனின் கட்டளை போலும். அது இப்போது உதவியிருக்கிறது,' என்றார்.

நெகிழ்ந்துபோய் சீடனை நெக்குருக அணைத்துக் கொண்டார் தியாகராஜர்.

---

சென்னை திருவொற்றியூருக்கு தல யாத்திரையாக வந்த தியாகராஜர், திரிபுரசுந்தரி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டார். நாட்டை (ஜகதா நந்த காரக ஜய ஜானகி ப்ராண நாயக...),

கௌளை (துடுகு கல நந்தே தொர கொடுகு ப்ரோசுரா எந்தோ…), ஆரபி (ஸாதிஞ்செநெ ஓ மனஸா…), வராளி (கனகன ருசிரா கனகவஸந நிந்து…) ஸ்ரீராகம் (எந்தரோ மகானுபாவுலு அந்திரிக்கி வந்தனமு…) ஆகிய ஐந்து ராகங்களால் ஆன பஞ்ச ரத்ன கீர்த்தனைகளை திரிபுரசுந்தரி சந்நிதிக்கு முன்னால் இயற்றி, அன்னைக்கு இசை மாலையிட்டு மகிழ்ந்தார். இன்றளவும் அந்த கீர்த்தனைகள் ஒவ்வொரு வருடமும் திருவையாறில் தியாகராஜ ஆராதனையின் போது பிரபல சங்கீத வித்வான்களால் கோஷ்டி கானமாகப் பாடப்படுகின்றன.

தன் திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்டு திருவையாறுக்குப் புறப்பட்டார் தியாகராஜர். அவரை வழியனுப்பி வைத்த பலரில் கோவூர் நிலச்சுவான்தாரும் இருந்தார். அவர் ஆயிரம் பொற்காசுகளைத் தன் அன்பளிப்பாக வழங்கினார். ஆனால் தியாகராஜர் அதனை ஏற்க மறுத்து விட்டார். ஆனால் பிரமுகரோ, தியாகராஜரின் சீடர்களிடம் குருவின் இறைவழிபாட்டுச் செலவுக்கு வைத்துக் கொள்ளுமாறு கூறி, அந்தப் பொன் முடிப்பைக் கொடுத்தார். சீடர்களுக்கு, தியாகராஜர் அதை மறுத்தது தெரிந்தாலும், இறை வழிபாட்டுச் செலவுக்குதானே என்ற கருத்தில் வாங்கிக் கொண்டு, குருவுக்குத் தெரியாமல் அவர் பயணிக்கும் பல்லக்கினுள் ஒளித்து வைத்து விட்டார்கள்.

வழியில் கொள்ளையர் கூட்டம் ஒன்று அவரது பல்லக்கைத் தடுத்து நிறுத்தியது. க்ஷஎங்களிடம் பொருள் ஒன்றும் இல்லையப்பா. தேடிப் பார்த்து, ஏதேனும் கிடைத்தால் எடுத்துக் கொள்ளுங்கள்,' என்று இதமாகக் கூறினார் தியாகராஜர். உடனே சீடர்கள் அவரை நெருங்கி பொற்காசுகள் பற்றியும், அது ராம சேவைக்காக கோவூர் பிரமுகரால் வழங்கப்பட்டது என்றும், அந்த முடிப்பு பல்லக்கிலேயே ஒளித்து வைக்கப்பட்டுள்ளது என்றும் கிசுகிசுப்பாகக் கூறினார்கள்.

அது தியாகராஜருக்கு ஏற்புடையதாக இல்லை என்றாலும், ராம சேவை என்று சொல்லப்பட்டதால் அதைக் காக்கும் பொறுப்பையும் அவர் ஸ்ரீராமனிடமே விட்டுவிட்டார்.

பயணம் தொடர்ந்தது. ஆனால் கூடவே அவரை நம்பாத கொள்ளையர்கள் அவர்களைத் தொடர்ந்தார்கள். வெகு தொலைவுக்கு எந்தத் தொந்தரவும் இல்லை. ஆனால் பல நிமிடங்களுக்குப் பிறகு கொள்ளையர்கள் தியாகராஜரிடம் வந்து அவர் காலில் விழுந்து வணங்கினார்கள். 'எங்களை மன்னிச்சுடுங்க சாமி. உங்க பல்லக்கை நெருங்கவே முடியாதபடி முன்னாலேயும், பின்னாலேயும் இரண்டு வில் வீரர்கள் மகா தேஜஸோடு காவலர்கள் போல போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் மானுடர்கள் அல்ல, தெய்வங்கள்ே தெய்வங்களே உங்களைக் காக்கிறது என்றால் நீங்கள் பெரிய மகான்தான், எங்களை மன்னிச்சுடுங்க…க்ஷ என்று சொல்லி கதறி அழுதார்கள்.

'ஸ்ரீராமன் காவலுக்கு வந்தானா? அடடா…. அந்த ராம லட்சுமணரைப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே!' என்று ஏங்கினார் தியாகராஜர்.

'இன்னும் ஐந்தே நாட்களில் என்னை வந்தடைவாய்,க்ஷ என்று ஸ்ரீராமன் தன் கனவில் வந்து சொன்னதும் பெரு மகிழ்ச்சியுற்றார் தியாகராஜர். சீடர்களிடம் அப்போது முதலே ராமநாம பஜனையை ஆரம்பிக்கச் சொன்னார். கனவு தெரிவித்தபடியே அடுத்த ஐந்தாம் நாள், 1847, ஜனவரி 6ம் நாள் புஷ்ய பகுள பஞ்சமி தினத்தில் ஓர் ஒளிப்பிழம்பாக அவருடைய ஆன்மா ஸ்ரீராமனை அடைந்து இன்புற்றது.

# கைகளே சந்தனக்கட்டை

~ ரா.பன்னீர் செல்வம்

நம்ம சத்வித்யா வாசகர்களுக்கு இந்த இதழில் நாம் அறிமுகம் செய்யவிருப்பது மிகுந்த தியாக சிந்தனையும் இறைவன் பால் ஈடற்ற அன்பும் கொண்டிருந்த மூர்த்தி நாயனாரின் பெருமைகளை!

நான்மாடக் கூடல் எனும் நற்பெயரைப் பெற்ற மூதூராம் மதுரை மாநகரில் உதித்தவர் மூர்த்தி என்னும் இறையன்பர். மூர்த்தியாரின் சிவத் தொண்டினை அந்த ஊரில் பலரும் அறிந்திருக்க...... அன்னை மீனாட்சி, தானாட்சி செய்து வரும் ஆலய சுவர்கள் கூட இவரது பக்தியின் வலிமையை மெச்சிக்கொண்டிருந்தன.

அப்படி இவர் செய்து வரும் சிறப்பான செயல் என்னவென்று தானே கேட்கிறீர்கள்??.. இதோ பார்ப்போம்.

இறைவனின் இடப்பாகம் பெற்ற அன்னை, மீனாட்சி என்னும் திருநாமத்தோடு அருளாட்சி செய்து வரும் இந்த ஆலயத்தில் நான்மறை வணங்கிடும் நாதனான இறைவன் சொக்கநாதன் என்கிற திருப்பெயரோடு, தன்னைக் காணவரும் அடியார்களை சொக்கவைக்கும் அழகோடு அருட்காட்சி தந்து ஆசி வழங்குகின்றார் அல்லவா? அந்த இறைவனின் லிங்கத் திருமேனிக்கு சந்தனக்காப்பு சார்த்தி, கண்கொள்ளா அழகோடு காட்சி தந்ததை தன்னுடைய இளம் வயதில் கண்ட மூர்த்தியார், சரியான பருவம் வந்த நாள் முதலாய், இறைவனை அழகு செய்யும் இந்த சந்தனக்காப்பிற்கு, என் இறுதி மூச்சு உள்ளவரை நானே சந்தனம் அரைத்துக் தருவேன் என, தன் மனதில் சங்கல்பம் செய்து கொண்டார். அந்த இறைப்பணி ஒரு நாள் கூட தவறிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக செய்து வந்தார்!

சொக்கரின் திருமேனியை அலங்கரிக்க, தானே சென்று சந்தனக் கட்டைகளை வாங்கி வருவார். சந்தனக்கட்டை வாங்க பணம் வேண்டுமே!... இறைவனுக்குத் தொண்டு செய்த நேரம் போக, மற்ற நேரங்களில் ஆலயத்தை சுற்றியுள்ள வியாபாரிகள் சொல்லும் வேலைகளை செய்து, அதன்மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் சந்தனக் கட்டைகளை வாங்கி வந்து ஆலயத்தில் அதற்கென உள்ள இடத்தில் சந்தன கட்டைகளை இழைத்து சரியான அளவு வந்ததும் அப்படியே அந்த சந்தனக் குழம்பை எடுத்துக்கொண்டுபோய், திருமேனி தீண்டுவாரிடம் கொடுப்பார்.

இறைவனுக்கு அபிஷேகம் செய்து, அதன்பின் திரையிட்டு அலங்கரிப்பார்கள், நந்தி விலகுமா என்று காத்திருந்த நந்தன் போல, திரைச்சீலை எப்போது விலகும்?.... சொக்கேசனின் திருமேனியை சந்தனக்காப்பு அலங்காரத்தில் எப்போது பார்ப்போம்? என்று காத்துக் கிடப்பார்! திரை விலகிடும்! திவ்ய தரிசனம் கிடைக்கும்! இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கூப்பி, "இறைவா! இந்த திவ்ய தரிசனம் என் இதயத்தைக் குளிர்விக்கிறதே: இந்த சந்தனக் காப்பில் உன்னை தரிசனம் கண்டதே என் பிறவிக் காப்பு!" என கண்கள் பனிக்க வேண்டியபடி, பரவசத்தில் மிதப்பார்!

அதோடு மட்டுமா? அங்கிருக்கும் பக்தர்களிடம் ஓடோடிச்சென்று, "அதோ.... இறைவனின் சிவலிங்கத் திருமேனியை அலங்கரிக்கும் சந்தனத்தை இந்தக்கைகளால் தான் அரைத்துக் கொடுத்தேன்," என உற்சாகத்தோடு, ஒரு குழந்தையின் குதூகலத்தோடு சொல்வார்.

தன்னை மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று எதிர் பாராமல், இந்த இறைப் பணியை செய்தது நான்தான் என எல்லோரிடமும் சொல்வதில் இவருக்கு அப்படி ஒரு திருப்தி! இவர் இப்படி சொல்லச் சொல்ல அதை யாரும்



பொருட்படுத்தாமல் செல்வதும் அதனைக் கண்டு, இவர் வருத்தம் கொள்ளாமல்..... இறைவன் இப்படி அழகுடன் விளங்க, என் கையால் அரைத்த சந்தனமே காரணம் என்பதை இறைவன் அறிவானே, அது ஒன்றே போதும், என்ற குழந்தை உள்ளத்தோடு பல்லாண்டுகளாய் இந்தத் தொண்டினை தொடர்ந்து கொண்டிருந்தார், மூர்த்தியார்!

ஒருநாள், திடீரென அந்த செய்தி வந்தது!
மதுரை பாண்டிய மன்னனோடு கர்நாடக மன்னன் படையெடுத்து வந்து விட்டதாகவும் அன்றே போர் நிகழ விருப்பதாகவும் பரபரப்பாய் எல்லோரும் பேசிக் கொள்ள, "யார், யார்மீது போர் தொடுத்தால் என்ன?... சொக்க நாதனை யார் நெருங்குவார்? என் சந்தன சேவையை யார் தடுத்திடுவார்? என்று அலட்சியமாய் சொன்னவர், வழக்கப்படி சந்தனக்கட்டையை வாங்கினார்!
வீதியெங்கும் போர்முழக்கம்! குடிகளிடம் ஒரே பரபரப்பு! என்ன ஆகுமோ? என்ன நடக்குமோ என்னும் தவிப்பு!
ஆனால், மூர்த்தியாரோ... "ஒன்றும் ஆகாது: என் இறைவனுக்கும் ஒன்றும் ஆகாது: எனக்கும் ஒன்றும் ஆகாது!" என்ற படி, சந்தனம் இழைக்கத் தொடங்கி விட்டார்!

போர் முடிவுற்றது! மதுரை மன்னன் தோல்வி கண்டான்! கர்நாடக மன்னன் வெற்றியைப் பெற்றான்! வெற்றிக் கொண்டாட்டத்தோடு அரியணை ஏறிய மன்னன், ஆலயப்பிரவேசம் செய்ய விருப்பதை அறிந்து ஆலயமே அல்லோலகல்லோலப்பட்டது! ஆலயத்தை தூய்மைப்படுத்தி, அரசனின் வருகைக்காக சிவாச்சாரியார்கள் சிரத்தையோடு காத்துக் கொண்டிருந்தார்கள்.

இது எல்லாம் தெரிந்திருந்தும்" மன்னன் வந்தால் வரட்டும்; தரிசனம் பெறட்டும்! அவரை வரவேற்கத்தான் இவ்வளவு பேர் இருக்கின்றீர்களே..... நானும் உங்களுடன் கைகட்டி, வாய் பொத்தி மன்னனை வரவேற்க வந்து விட்டால் என் இறைவனுக்கு சந்தனம் அரைப்பது யார்?... போங்கள், போய் உங்கள் பணியை கவனியுங்கள்; நான் என் பணியைத் தொடருகிறேன்; என்றபடி, சந்தனத்தை இழைக்க ஆரம்பித்துவிட்டார் மூர்த்தியார்!

மதுரைக்கு அரசனாய் பொறுப்பேற்ற அந்த கர்நாடக மன்னன், ஆலயத்திற்குள் வர, மங்கள வாத்தியங்களும் வேதியர்களின் வேத கோஷங்களும் போட்டிபோட்டு முழங்கின. இதனிடையே, சிவ சின்னங்களை தரித்த ஓதுவார் மூர்த்திகள் திருமுறைப் பதிகங்களைப் பாடினர்.

தமிழர்களின் பாரம்பரிய வரவேற்பினைக் கண்டு மனம் மகிழ்ந்தபடி வந்த மன்னன், அம்மனின் சன்னதிக்குள் புகும் வேளையில் அங்கே ஓரமாய் அமர்ந்து கருமமே கண்ணானபடி, தலையை நிமிர்ந்து தன்னைக் காணாமல் சந்தனம் அரைத்துக் கொண்டிருந்த மூர்த்தியாரைக்கண்ட மன்னனின் முகம் கோபத்தால் சிவந்தது, எனினும் அம்மனின் தரிசனம் வேண்டி, சன்னதி நோக்கி சென்று விட்டான்!

மன்னனின் முகக் குறிப்பை உணர்ந்த அவனது அமைச்சர் மூர்த்தியாரைப் பற்றி விசாரித்தார்! மூர்த்தியாரின் சந்தனக்காப்பு தொண்டினை எடுத்துச் சொன்னவர்கள்,
"மூர்த்தியார் இறைப் பணியில் ஆழ்ந்து விட்டால் வேறதையும் லட்சியம் செய்ய மாட்டார்! அவர் ஓர் தூய சிவத்தொண்டர்," என ஓதுவார்கள் சொன்னார்கள்.

அரண்மனைக்குத் திரும்பிய மன்னன், "அந்த



ஆணவம் பிடித்தவன், இந்த அரசனுக்குக் கொடுக்க வேண்டிய உரிய மரியாதையை தராமல் இருந்தான்; யார் அவன்?..." என அமைச்சரைக் கேட்க,
"அவன் ஒரு சாதாரண பணியாள்," என்ற அமைச்சர், மூர்த்தியாரின் சந்தனக்காப்பு சேவையைப் பற்றி, தான் அறிந்ததை மன்னனிடம் சொன்னார்!
இருப்பினும் மன்னனின் மனம் ஆறவும் இல்லை; மாறவும் இல்லை! அரசனை அவமதித்து ஆலயப்பணியா? "என வெகுண்டவன், மதுரை மாநகரில் சந்தனக் கட்டைகளே கிடைக்காதவாறு பல ஏற்பாடுகளை செய்துவிட்டு, இனிஎப்படி அவன் பணி தொடரும் என்று பார்க்கலாம்!" என ஆணவச்சிரிப்பை உதிர்த்தான்.

மூர்த்தியார் எங்கு தேடியும் சந்தனக் கட்டைகள் கிடைக்கவே இல்லை! மெய் சோர்ந்தார்; உள்ளம் நொந்தார்! என் சிந்தையை ஆட்கொண்ட சுந்தரேஸ்வரருக்கு சந்தனக்காப்பு சார்த்த முடியாதா?" என பலவாறு புலம்பியவர், ஆவேச குமுறலோடு தினமும் தான் சந்தனம் அரைக்கும் கல்லருகே வந்தார்!

"என்னிருகைகள் இருக்க, சந்தனம் எதற்கு? இறைவா என் பக்தி உண்மையெனில் என் கைகளை இழைக்கிறேன் இந்தக் கல்லில்! சந்தனம் திரளட்டும்; சந்தனம் திரளட்டும்!"
என்றவாறு, தன் முழங்கைகள் இரண்டையும் கல்லில் வைத்து தேய்த்தார் சந்தனம் வரவில்லை குருதி வழிந்தது சதைகள் கிழிந்தன. ஆயினும் மூர்த்தியார் நிறுத்தவில்லை ரத்தமும் அந்தக் கல்லின் நிறத்தையே மாற்ற எலும்புகள் தெரியத் தொடங்கின முன்னிலும் வேகமாய் கைகளை இழைத்தார் மூர்த்தியார்

சுற்றி நின்று பார்த்தவர்கள் மனம் பதறினார்கள் எவராலும் அவரை தடுப்பதற்கும் திராணியில்லை ரத்தம் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடியது சந்தனம் சந்தனம் என்று மூர்த்தியின் வாய் முணுமுணுத்தது அவர் தன் கண்களைத் திறக்கவே இல்லை.

அப்போது, மூர்த்தியாருக்கு மட்டும் கேட்டது அந்த அசரீரி "இன்றோடு தீமைகள் விலகி விடும்! இனி நீ உயர்வுகள் பெற்று சிவபதம் அடைவாய்!" இந்த இறை ஒலியை கேட்டு, மெய்சிலிர்த்தார் மூர்த்தியார்!
இறைவனின் திருவுளப்படி, மன்னன் அன்றே அகால மரணமடைய'. வாரிசு இல்லாத நிலையில் யானையின் துதிக்கையில் மாலையைக் கொடுத்து மன்னனைத் தேர்ந்தெடுக்க அனுப்பினர், அரசப் பிரதானிகள்! இன்றேனும் சந்தனக்கட்டைகள் கிடைக்குமா என்ற சிந்தனையோடு நடந்த மூர்த்தியாரின் கழுத்தில் பட்டத்து யானை மாலை சூட்டியது!
"என்னே ஒரு அதிசயம்!? எதையும் பலன் நோக்காமல் இறைப்பணி மட்டுமே செய்த இந்தச் சிவ பக்தருக்கு இப்படி ஒரு பெரும் பேற்றினை இறைவன் கொடுத்தானே? என பார்த்தவரெல்லாம் புளகாங்கிதம் அடைந்தார்கள்.

பிறகென்ன'?
மன்னனாகிய மூர்த்தியாருக்கு, விபூதியே அபிஷேகப் பொருள்; சடைமுடியே கிரீடம்; ருத்ராட்சமே ஆபரணம்," என்னும் நிலையில் மதுரையை ஆண்டார்.

இறைப்பதம் அடைவதற்கு முன் இறைவனின் கருணையால் நாயனார் என்னும் சிறப்போடு இன்று அறுபத்து மூவரில் ஒருவராய் சிவனடியார்களால் வணங்கப்படுகிறார்.

இன்றும்' மூர்த்தி நாயனார் அரைத்த அந்தக் கல், மீனாட்சி அம்மன் சன்னதிக்குள் நுழையும் முன் பஞ்சபாண்டவர் மண்டபத்தில் வரலாற்றுப் பெருமையை சுமந்தபடி அருட் காட்சி தருவதைக் காணலாம்.

**ஓம் நமச்சிவாய!**

# ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினியும் விஜயதசமி மகிமையும்!!

~ திருவாரூர் சு. சேகர்



உலகம் அனைத்தும் "சக்தி மயம்" என்பதை விளக்குவதே நவராத்திரியின் தத்துவம் தர்மத்திற்கு எப்போதெல்லாம் குறைபாடு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் பராசக்தி பல தோற்றங்களை எடுத்து அதர்மங்களை வீழ்த்தி தர்மத்தை நிலைபெற செய்திருக்கிறார். மகிஷாசுரனை பராசக்தி வதம் செய்ய எடுத்த அவதாரம் தான் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

அரக்கன் மகிஷாசுரனின் அட்டூழியங்களில் இருந்து இவ்வுலகைக் காப்பாற்றிய ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினிக்கு தொடர்ந்து ஒன்பது நாட்கள் பூஜை செய்து வழிபடும் தெய்வீகத் திருவிழா நவராத்திரி.

நவராத்திரி என்பது துர்கா தேவி போர் புரிந்த ஒன்பது நாள் இரவுகளையும், பத்தாம் நாள் அவர்கள் பெற்ற வெற்றியையும் குறிக்கிறது. ஆகவே ஒன்பது நாட்களை நவராத்திரி தினமாக கொண்டாடி பத்தாம் நாள் விஜய தசமியாக கொண்டாடப்படுகிறது.

**ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி தோற்றமும், நவராத்திரியும்:**

மகிஷாசுரன் என்ற அசுரன் பிரம்மாவை நோக்கி தவம் இருந்தான். அவனது தவத்தைக் கண்டு மனம் இரங்கிய பிரம்மதேவர், மகிஷாசுரனின் முன்பு தோன்றினார். அவரைக் கண்டதும் மகிஷாசுரன் தனக்கு மரணமில்லாத வரத்தை தருமாறு பிரம்மதேவரிடம் கேட்டான். உடனே பிரம்மதேவர் "பிறந்த அனைவருக்கும் இறப்பு நிச்சயம். எனவே, வேறு வரம் கேட்கும்படி" கூறினார்.

மகிஷாசுரன் "பெண்கள் பலம் இல்லாதவர்கள் என்பதால் தன்னை அழிக்க முடியாது என்ற காரணத்தால் ஒரு பெண்ணால் மட்டுமே தனக்கு மரணம் நிகழ வேண்டும்" என்று வரம் பெற்றான். எந்தப் பெண்ணிற்கு எனையழிக்கும் அளவிற்கு வலிமையும், துணிவும் இல்லை என்ற எண்ணத்தில், தனக்கு அழிவே கிடையாது என்ற முடிவுக்கு வந்துவிட்ட மகிஷாசுரன் தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் என அனைவரையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான். மகிஷாசுரனின் தொல்லையால், தேவர்கள் அனைவரும் துன்பம் அடைந்தனர். துன்பம் எல்லையை கடந்ததால் தேவர்கள் அனைவரும் பிரம்மனின் ஆலோசனைபடி சிவபெருமானிடம் சென்று

முறையிட்டனர்.

தேவர்களின் நிலையினை அறிந்த சிவபெருமான், பிரம்மனின் வரத்தின்படி மகிஷாசுரனின் அழிவு ஒரு பெண்ணால் தான் என்பதால் அவ்வரத்திற்கேற்ப ஒரு பெண் சக்தியின் அவசியத்தை அறிந்து, சிவன் தமது சக்தியை வெளிக்கொணர்ந்து ஒரு ஒளியை உருவாக்கினார். இதனைப் போன்றே பிரம்மா, விஷ்ணு தங்களது உடலிலிருந்து சக்தியினை வெளிக்கொணர்ந்து ஒரே வடிவில், ஒளிவடிவில் மூன்றும் ஒன்றாகக் கலந்தன. அந்த ஒளிப்பிழம்பில் இருந்து துர்காதேவி தோன்றினாள். மற்ற தேவர்களும் தங்களது படைக்கருவிகளை அவளுக்குக் கொடுத்து உதவினர் என்பதை மார்க்கண்டேய புராணமும், துர்கா சப்தசதியும் கூறுகின்றன.

துர்காதேவி அனைத்து தெய்வங்களிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்று, தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மகிஷாசுரனை அழிப்பதற்காக புறப்பட்டுச் சென்றாள்.

துர்காதேவி, ஒன்பது நாட்கள் போரிட்டு பத்தாம் நாளில் எட்டுக்கரங்கள் உடைய துர்க்கையாக விஸ்வரூபம் எடுத்து மகிஷாசுரனை வதம் செய்ததார். கொடியவனான மகிஷாசுரன் அழிந்ததால் தேவர்கள் அனைவரும் மகிழ்ந்தார்கள். மகிஷாசுரனை வதம் செய்து தேவலோகத்தையும், பூலோகத்தையும் காப்பாற்றியதால் "ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி" என்று துர்கையை போற்றினார்கள். ஒன்பது நாள் போர் செய்து பத்தாவது நாள் அவர் வெற்றி பெற்றதால் விஜயதசமி உருவானது. அந்த வெற்றித்திருநாளையே விஜயதசமியாகக் கொண்டாடுகிறோம்.

### புராணத்தில் விஜயதசமி:

வால்மீகி ராமாயணத்தில் புரட்டாசியில் வரும் தசமி (விஜய தசமி) அன்று இராமன், இராவணனுடன் போர் செய்ய உகந்த நாள் என்று அன்று போருக்கு புறப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் அரசாட்சி, அதிகாரம், நாடு முதலானவற்றை இழந்த பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் அஞ்ஞானவாசம் முடிந்த பின் வன்னி மரத்தில் மறைத்து வைத்திருந்த தங்களது ஆயுதங்களை வெளியே எடுத்து அர்ஜுனன் வழிபட்ட நாள் விஜயதசமி.

### விஜயதசமி மகிமை:

எந்த ஒரு செயலை செய்தாலும் அதில் தாம் வெற்றி பெற வேண்டும் என்றே எல்லோரும் ஆசைப்படுவோம். அந்த வெற்றியை நமக்கு தரும் நாளே விஜயதசமி ஆகும். அன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் வெற்றி தரும். விஜயதசமி நாள் அன்று குழந்தைகளுக்கு அக்ஷர அப்யாசம் —— எழுத்துப் பயிற்சி தொடங்கினால் கல்வியில் சிறந்து விளங்குவர் என்பது ஐதீகம். மழலை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்கும் பாட்டு, இசைக் கருவிகள் பயிற்சி, நடன பயிற்சி, பிறமொழி பயிற்சி, புதிதாக ஒரு தொழிலை கற்றுக்கொள்வது ஆகியவற்றை இந்த நாளில் தொடங்கினால் மிகுந்த பலனைத் தரும். படிப்பு மட்டுமில்லாமல் சுபவிஷயங்களை தொடங்கினாலும் அதில் சுலபமாக வெற்றி பெறலாம்.



### தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி கோயில்கள்:

மகிஷாசுரமர்த்தினி திருக்கோலத்தை பல்வேறு ஸ்தலங்களில் தரிசிக்கலாம். அதில் சில'.

இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள தேவிபட்டினத்தில் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி எனும் உலகநாயகி அம்மன் கோவில். இந்த கோவில் அம்பிகையின் சக்தி பீடங்களில் இது வீரசக்தி பீடமாக வழிபடப்படுகின்றது. சர்வ சக்தி பொருந்திய இந்த தேவி மகிஷாசூரனை அழித்த

கோபம் குறைந்து சாந்த நிலையில் சுயம்பு வடிவில் இத்தலத்தில் அருட்பாலிக்கிறார்.

வாள்வச்சகோஷ்டம் ஸ்ரீ மகிஷாசுரமர்தினி கோயிலில் ஸ்ரீ மகிஷாசுரமர்தினி நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இக்கோயில் நாகர்கோவில் - திருவனந்தபுரம் சாலையில் காட்டாத்துறை ஊரில் இருந்து இடதுபுறம் 5 கி.மீ. தூரத்திலும், நாகர்கோவிலில் இருந்து இந்த ஊர் 35 கி.மீ. தூரத்தில் உள்ளது. அந்தக்காலத்தில் திருவிதாங்கூர் மன்னர்கள் போரில் வெற்றி பெற்று திரும்பும் பாதையில், ரத்தக்கறை படிந்தவாளை இந்தக்கோயிலின் பக்கத்திலுள்ள குளத்தில் கழுவியபின்னர்
ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினியை வழிபட்டுச் செல்வார்கள்.

மத்தூர் ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி அம்மன் கோயில் திருத்தணியில் இருந்து திருப்பதி போகும் மார்க்கத்தில் ஏழு கி.மீ தூரத்திலும், பொன்பாடி ரெயில் நிலையத்திற்கு மேற்கே இரண்டு கி.மீ தூரத்தில் இருக்கிறது. இங்கு ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி புன் சிரிப்பு முகத்தில் தவழ ஈசான மூலையை நோக்கியபடி காட்சி தருகிறாள்

**மகிஷாசுரமர்த்தினி ஸ்லோகம்:**
அசுரனை அழித்த ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினியின் கோவத்தை சாந்த படுத்த இந்த ஸ்லோகம் பாடப்பட்டது 'ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி ஸ்லோகம் பாடல் சில வரிகள்'

"அயிகிரி நந்தினி நந்தித மேதினி விச்வ வினோதினி நந்தநுதே கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே பகவதி ஹே சிதிகண்ட குடும்பினி பூரிகுடும்பினி பூரிக்ருதே ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி ரம்ய கபர்தினி சைலஸுதே ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே"

**பொருள்:** மலையரசனின் மகளே, உலகை மகிழ்விப்பவளே, விளையாட்டாக உலகை நடத்திச் செல்பவளே, நந்தனால் வழிபடப்பட்டவளே, சிறந்த மலையான விந்திய மலையில் உறைபவளே, திருமாலுக்குப் பெருமை சேர்ப்பவளே, வெற்றி வீரர்களால் துதிக்கப்படுபவளே, பகவதீ, நீலகண்டரின் பத்தினியே, உலகமாகிய பெரிய குடும்பத்தை உடையவளே, அரியவற்றைச் சாதிப்பவளே, மஹிஷாசுரனை அழித்தவளே, அழகாகப் பின்னிய கூந்தலை உடையவளே, மலைமகளே, ஜெய ஜெய என்று உன்னைப் போற்றுகிறேன்.

ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி காயத்ரீ
(துயரம் நீங்கி செல்வம் பெருக)
'ஓம் மகிஷாசுரமர்த்தினி ச வித்மஹே,
விஸ்வ விநோதின்யை க்ருஷ்ணப்ரியாய ச தீமஹி
தந்நோ துர்க்கா ப்ரசோதயாத்'

(மகிஷனை அழித்த விஷ்ணுவின்
பத்தினியே வறுமை துயரம்
துடைப்பாய், வரமருள் துர்க்கையே.)
என்ற மகிஷாசுரமர்த்தினி காயத்திரியை சொல்லி வணங்குவோம் ஞானத்தையும், வெற்றிகளையும் பெறுவோம்.

விஜயதசமி அன்று ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி வழிபாடு செய்து, நல்வாழ்வு வாழ பிரார்த்திப்போம்.
ஓம் சக்தி.. பராசக்தி'

# பெண்மையைப் போற்றும் நவராத்திரி ..!

~ சைவ சித்தாந்த செம்மல்
கடலூர் கவிஞர்
சீனு செந்தாமரை

சங்க இலக்கியத்தில் 31 பெண்பாற் புலவர்களின் பாடல்கள் அற்புதமாக இடம் பெற்றுள்ளன. அதிக பாடல்களை எழுதியவர் தமிழ் மூதாட்டி அவ்வையார்!
அதியமானுக்கும் நெடுங்கிள்ளிக்குமான போரை தம் பாட்டுத் திறத்தாலே தவிர்த்தவர் அவ்வையார். குறுந்தொகையில் அற்றைத் திங்கள் எனும் அழகு தமிழ் பாடலை எழுதியவர் பாரி மகளிர்!
கரிகாற் சோழனின் இனிய மகள் ஆதிமந்தி பிற்காலத்தில் ஆட்டனத்தி ஆதிமந்தி எனும் அற்புத இலக்கியத்தை கவியரசு கண்ணதாசன் அவர்கள் படைத்தார்.
நற்றமிழ் புலவர் நக்கணையார் நச்செள்ளையார் - காக்கைப் பாடினியார் போன்றவர்கள் இப்போதும் பெரிதும் போற்றப்பெறுகின்றனர்.. பொன் முடியார் ஒக்கூர் மாசத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் படைத்த இலக்கியங்கள் தாம் எத்துணை! எத்துணை!
வெள்ளை கமலத்தில் வீற்றிருக்கும் அன்னை கலைவாணி அருளால் அகிலமே போற்ற வாழ்ந்தார்கள் நம் இதயக் கோயிலில் பெண் தெய்வங்களாக வாழ்ந்து வருகின்றனர். என்றென்றும் போற்றப்பெறும் கற்பின் மாதரசிகள் நளாயினி தன் கணவன் உயிரை காக்க பொழுது விடியாதிருக்க சபித்தவள் நளாயினி.

கூற்றுவனிடமிருந்து கணவனின் உயிரை மீட்ட சாவித்திரி. விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் மகளாக பிறந்த சகுந்தலை.

மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக்கியவள் அத்ரி முனிவர் மனைவி அனுசுயா- இராம பிரானின் பொற்பாதம் பட்டு கல்லிலிருந்து சாபம் நீங்கி உயிர் பெற்ற அகலிகை - பரசுராமரால் கொல்லப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்ற ரேணுகா - கணவன் அரிச்சந்திரன் மட்டுமே காணவல்ல தாலியை அணிந்த சந்திரமதி, போன்ற புராண கால பெண்ணரசிகளும் சிறப்பு பெற்றதும் அன்னை பராசக்தி திருவருளால் தான்...
வீர மங்கை வேலுநாச்சியார் - தென்னகத்து ஜான்சிராணி கடலூர் முதுநகர் அஞ்சலை அம்மாள் - இடி முழுக்கமாய் ஆங்கிலேயரை எதிர்த்த ஒப்பற்ற வீராங்கனை ஜான்சி ராணி! இளம் பருவத்திலேயே சுதந்திர முழக்கம் கிட்ட தில்லையாடி வள்ளியம்மை... டாக்டர் முத்துலட்சுமி வரை முப்பெருந் தேவியர்களின் திருவருள் பெற்றவர்களே....
கல்வியா செல்வமா வீரமா என்றால் கல்வியும் செல்வமும் வீரமும் இணைய அங்கே தெய்வமும் குடிகொள்ளும். ஒன்றில்லாமல் ஒன்று இல்லை....
அன்னையும் தந்தையும் தெய்வத்தையும் எந்நாளும் பிரிக்க முடியாது.

சிவனுக்கு ஓர் ராத்திரி - அதுவே சிவராத்திரி மகா சிவராத்திரி!
சிவராத்திரியில் விரதமிருந்து கண் விழித்து வழிபட்டவர்கள் பேறு பெற்றவர்கள். உமையாளை உமா மகேஸ்வரியாக போற்றப் பெறுகிறாள். கொற்றவை - காளி எனவும் போற்றப் பெறுகின்றாள் உலகம்மை. நவராத்திரி 9 நாட்களில் முதல் மூன்று நாட்கள் சக்தியை துதிக்கும் நாட்களாக போற்றப் பெறுகின்றது.



இரண்டாவது 3 நாட்கள் மகாலக்ஷ்மிக்குரிய நாளாக போற்றப் பெறுகின்றாள். வல்லமை தரும்

வரலக்ஷ்மியாக, இராஜ யோகம் அருளும் இராஜ லக்ஷ்மியாக செல்வ மழை வழங்கும் சொர்ண லக்ஷ்மியாக அருள் பாலிக்கின்றாள். இந்த 3 நாட்களில் மகாலக்ஷ்மியை போற்றி வழிபடும் நாட்களாக போற்றப் பெறுகிறது.

நவராத்திரி கடைசி 3 நாட்கள் மகா சரஸ்வதிக்குரிய நாட்களாக கருதி மகா சரஸ்வதி பூஜை செய்யப் பெறுகிறது.

வீரத்தின் வடிவமான பராசக்தி வற்றாத செல்வதை அருளும் அஷ்டலக்ஷ்மியாக பேரறிவை அருளும் கலைவாணியாக அருள் பாலிக்கும் அற்புத திருநாட்களே நலம் தரும் நவராத்திர்!
இந்த நாட்களில் வீட்டில் உள்ள பெண் குழந்தைகளை அலங்காரம் செய்து, கொலு அமைத்து குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் ஒன்று கூடி பிராத்தனை - பூஜை - பக்தி பாடல்கள் என ஒவ்வொரு இல்லங்களும் இனிய கோயில்களாக திகழும் இனிய காலமே நவராத்திரி பண்டிகையாகும்.




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி

யாகங்கள் மற்றும்

சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து

பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்

~ ரா. பன்னீர்செல்வம்

**குறிப்பிட்ட காலங்களில்தான் நீராட வேண்டுமா?**
நமது இந்து தர்மப்படி, காலை 4 மணி முதல் 5 மணி வரை முனிவர்கள் ஸ்நான காலமென்றும், காலை 5 மணி முதல் 6.30 மணி வரை சாதாரண மனிதர்கள் குளிக்க வேண்டிய நேரமென்றும் வரையறுக்கப்பட்டுள்ளது; அதற்குப்பிறகு எப்போது நீராடினாலும் ஒன்றுதான்!

**ஆறே நாட்களில் முக்தி பெற்ற பாக்கியசாலி யார்?**
உண்மையான அன்பை இயற்கையாக, எந்த ஆரவாரமின்றி இறைவனிடம் வெளிப்படுத்தி "என் கண்ணானவன் இவன்!" என சிவபிரானே போற்றிய ஸ்ரீகண்ணப்ப நாயனாரே, தொடர்ந்து ஆறு தினங்கள் சிவனை வழிபட்டு "அவன்" திருப்பாதம் சேர்ந்தார்.

**"திரிகூடாசலம்" ஊர் எங்குள்ளது?**
யாவரும் அறிந்த திருக்குற்றாலம் கொண்ட பெயர்தான் அது. உத்தாலகவனம் என்ற வேறு பெயருமுண்டு அவ்வூருக்கு.

குழல்வாய் மொழியம்மை உடனுறை குறும்பலா வீசர், குற்றால அருவி அருகே குடிகொண்டுள்ளார். இத்தலத்தில் சிவபெருமான் பிரம்ம தேவராகவும், விஷ்ணுவாகவும் இருந்து வருகிறார். "தாய குற்றாலம் குறும்பலாநாதர் குழல்வாய் மென் மொழியாய் மகிழருவி" என்பார் சம்பந்தர். அகத்திய முனிவர் இங்கே இறைவழிபாடு செய்து நற்பலன் பெற்றார்.

**'ஞான வாசிட்டம்' என்றால் என்ன?**
அது ஒரு சிறந்த நூலின் பெயர். இராமபிரானுக்கு வசிஷ்ட மாமுனிவர் உபதேசித்த அருமையான வேதாந்த சார தொகுப்பு அது. 2055 சிறப்பான சுலோகங்கள் அதில் உள்ளடக்கம்.
ஞானம் குறித்து வசிஷ்டர் அந்நூலில் கூறியுள்ளதால் "ஞானவாசிட்டம்" என்ற பெயர் அந்நூலுக்கு.

**ஒரு முகங்கொண்ட அனுமன் எதனால் பஞ்சமுக வடிவமெடுத்தார்?**
இராம - இராவணப் போர் நடக்கையில் இலங்கை வேந்தன் அழிந்து போகிறான். இதனால் ஆவேசங் கொண்ட சதகண்டன் என்ற அரக்கன், தன்னுடன் போரிட இராமனை அழைத்தான். அவர் ஆஞ்சநேயனின் தோளில் அமர்ந்து போரிட புறப்படுகையில், அனுமன், சதகண்டன் மாயாவி என்பதால், தான் தனித்து அவர்களை எதிர்க்க விரும்பினார். இதற்கு தலைவனின் அனுமதி கிடைத்தது.

அந்த ஆனந்தமுடன், வாயுபுத்திரன் குரங்கு, நரசிங்கம், கருடன், பன்றி, குதிரை ஆகிய ஐந்துவித சிரசுகள் தாங்கிய உடலுடன், சதகண்டனிடம் கடுமையாகப் போரிட்டு அவனை வீழ்த்தினார். இப்படித்தான் ஒரு முக அனுமன் பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆனார்.



**நம்மாழ்வாருக்கு "சடகோபன்" என்ற பெயர் எப்படி வந்தது?**
காற்றின் ஒரு வகையே சஷசடன்" என்பது.
சடன் நம் உடம்பில் பட்டால் நம்மிடம் ஏற்கெனவேயே குடி கொண்டுள்ள ஞானம் வெளியேறி நம்மை அஞ்ஞானம் சூழ்ந்து விடும். இத்தகையக் காற்று தன் மீது படாதவாறு

நம்மாழ்வார் காத்துக் கொண்டதால் அந்த ஞானி "சடகோபன்" என அழைக்கப்பட்டார்.

**"ஆலயமில்லா ஊர் காடு" என்று கூறியவர் யார்? அப்பாடல் எது?**

அப்பர் சுவாமிகளே இந்த தனது பாடலில் அப்படிக் கூறினார்.

"திருக்கோயில் இல்லாத திரு இல்ஊரும்
திருவெண்ணீறு அணியாத திரு இல்ஊரும்
பருக்கோடிப் பதித்திமையால் பாடா ஊரும்
பாங்கினோடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அரும்போடு மலர் பறித்திட்டுண்ணா ஊரும்
அவை எல்லாம் ஊரல்ல அடவிகாடு"

ஆனால் ஔவையாரோ ஒரே வரியில் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என பட்டென கூறிவிட்டார்!

**வீடுபேறு அடைய பற்று ஒரு தடையா?**

வீடு எனும் சொல் விடுதலையைக் குறிக்கும். "விடு" தளையை என்றும் கூறப்படுவதுண்டு.

உலக இன்ப, துன்பங்களுக்கு பாசமே காரணம். பாசபற்றை தள்ளுதல்தான் விடுதலை. நம்மைப்பற்று பற்றி உள்ளவரை பிறவிகளும், அதன் ஒரு அங்கமான துன்பமும் ஒரு தொடர்கதையே! பற்றுகள் விட்டவன் இறைவன். இவனை உறுதியாகப் பற்றிக் கொண்டு விட்டால் ("சிக்கெனப் பிடித்தேன்") நம்மைப் பிடித்த சனியனான பாசம் ஒழிந்துவிடும்.

ஒரு மரத்தின் மீதுள்ள கிளையில் அமர்ந்துள்ளவன், தான் பிடித்துள்ள கிளையை விட வேண்டுமானால் அதற்காக கண்டிப்பாய் வேறொரு கிளையைப் பிடித்துத்தான் ஆக வேண்டும். அந்த இரண்டாம் கிளைதான் "கடவுள்!"

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்றுவிடற்கு"

என்பது செம்மொழிப்புலவர் வள்ளுவரின் வாக்கு.



TURMERIC
& BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process
Call: 88702 88701

## கடலூர் பண்ருட்டி அருகே..

# திருவதிகை அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

மிகத் தொன்மையான சிவத்தலம் அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்! கடலூரிலிருந்து பண்ருட்டிக்கு செல்லும் சாலையில் பண்ருட்டி கிழக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

அழகிய கலை வேலைப்பாடுகள் அற்புதமான அரிய கலை சிற்பங்கள் - தஞ்சை பெரியக் கோயில் கோபுரம் போன்ற சாயல்.... புராதானமான சிற்பங்கள் ...என்று தரிசித்து இன்புற பல்வேறு சிறப்பு அம்சங்கள் தல இறைவன் அருள்மிகு வீரட்டேஸ்வரர் வீரட்ட நாதர் - அதிகை நாதர் சுவாமி கருவறையில் சுவாமிக்கு பின்னால் சோமாஸ்கந்தர் வடிவம் புடைப்பு மூர்த்தம் உள்ளது.

(திரிபுர சம்ஹாரம் , திரிபுரசுந்தரி மூர்த்தி சிறப்பு மூர்த்தம்)



அம்பிகை ஸ்ரீ திரிபுரசுந்தரி - ஸ்ரீ பெரிய நாயகி - சைவ பேரொளி திலகவதியாருக்கு தனி சந்நிதி உண்டு.

திருவதிகை திரு அதிகை அட்ட வீரட்டத் தலம் அப்பர் பெருமான் அருள் பெற்ற அற்புத திருத்தலம்.

கூற்றாயினவாறு முதல் தேவார பதிகம் பெற்ற சிவத்தலம்!
தல விருட்சம் சரக்கொன்றை கொன்றை மலர் சிவனுக்கு மிகவும் உகந்ததாகும்.

தல தீர்த்தம் கெடிலம் நதியாகும்.
கோயில் இராஜ கோபுரம் வாசல் வழியாக செல்லும் பாதையில் சந்நிதிக்கு முன்பு நிறைய கல்வெட்டுகள் பதிக்கப்பெற்று உள்ளன.
அனைத்து நட்சத்திரக்காரர்களும் அவர்கள் பற்றிய விபரங்கள் செய்ய வேண்டிய பரிகாரங்கள் குறித்து அரிய கல்வெட்டுகள் இருப்பது அதிசயம்.

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் திருவதிகை திருக்கோயிலை மனம், மொழி, மெய் ஒன்றுபட வலம் வந்தால் 16 முறை ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம் என்று உள்ளம் உருக உச்சரித்தபடி சுவாமி தரிசனம் செய்தால் 16 முறை காசிக்கு சென்ற மகா புண்ணியமும், பதினாறு செல்வங்களும் நம்மை வந்தடையும். திருவதிகை திருத்தலத்திற்கு வருகை தாருங்கள் வாழ்வில் வெற்றி வாகை சூடுங்கள்.

# கலைமகள், திருமகள் அருள் பேற.....

~ ரா. பன்னீர்செல்வம்

அருமை சத்வித்யா நேயர்களுக்கு......

நவராத்திரி நாயகியரின் திருவருள் கைவரப் பெறுகின்ற இந்த இனிய மாதத்தில் கலைமகள், திருமகள் அருளைப் பெற்று அனைவரும் கல்வி மற்றும் செல்வ வளங்கள் பெற, சவுந்தரிய லஹரியின் 96 வது மந்திரப் பாடலைப் மனம் குளிர ஜபிக்கலாம்.

**மந்திரப் பாடல்:**

"கலத்ரம் வை தாத்ரம் கதி கதி பஜந்தே ந கவயளு ச்ரியோ தேவ்யா கோ வா ந பவதி பதி; கைரபி தநை; மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸ தீனா- மசரமே குசாப்யா - மாஸங்க; குரவக - தரோ- ரப்ய ஸுலப:"

**இந்தப் பாடலின் பொருள்:**

முப்பெருந்தேவியரின் ஒருருவாய் அவதரித்த தாயே! உன் அருள் என்பதென்ன, சாதாரணமானதா? பிரம்மாவின் பத்தினியாம் கலைமகளைப் பாடி, அவரின் அருளோடு வல்லவர் ஆனோர் பலருண்டு அலைமகளின் அனுக்ரஹத்தால் ஏதோ ஒரு செல்வம் பெற்றவனும் செல்வமகன் ஆவதுண்டு அந்தப் பரமேஸ்வரனே கூட உன் தழுவலால் அனுதினமும் ஆனந்தத்தால், கூத்தாடுவதுண்டு! அம்மையே! எளியோருக்கும் உன்னருளால் காவியறிவு பெருகி, செல்வ வளம் பொங்கட்டும்.

**இந்த மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:**

இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை தடிமனான வெள்ளருக்குக் கட்டையின் மீதோ அல்லது தூய சந்தன பலகையின் மீதோ வரைந்து கொள்ள வேண்டும்!

குறைந்தது 1000 முறை என குறைந்தபட்சம் 8 அல்லது 3 நாட்கள் கிழக்கு நோக்கி அமர்ந்து இதற்கான மந்திரத்தை ஜபிக்க வேண்டும். குங்குமத்தினைக் கொண்டு லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்தல் நலம். எள், வெல்லம், நெய், தேன், தேங்காய், பழத்தோடு தயிர் சாதம் கொண்டு நைவேத்தியம் செய்யவும்.

இந்த மந்திரத்தைப் பிரயோகத்தினை முறைப்படி செய்வதன் மூலம் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவதோடு செல்வச் செழிப்பில் மிதக்கலாம். அதோடு, தேகத்தில் ஆறாத புண் கொண்டோர் நலம் பெறலாம்.



# அக்டோபர் – ராசி பலன் – 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




இந்த மாதம் காதல் கைகூடும். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும். திருமணத்திற்காக காத்திருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். கணவன் மனைவிக்கு இடையே நல்லிணக்கம் கூடும்.

சுயதொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். குழந்தைகளின் படிப்பிற்கான செலவுகள் அதிகரிக்கும். பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும்.

இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும். சுயதொழில் மூலம் அதிக லாபம் கிடைக்கும்.
உங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது இருக்கும். உத்தியோகத்தில் அதிக பணிச்சுமை உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.
மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள். உயர்கல்வி படிப்பவர்களுக்கு சில தடைகள் இருந்தாலும் இந்த மாத கடைசி பகுதியில் படிப்பில் ஏற்றம் காண்பார்கள்.
விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
1, 6, 7, 8, 14, 15, 20, 25, 28, 29.
**அசுப நாட்கள்:**
6, 7, 9, 10, 11, 24.




திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். குடும்ப உறவுகளிடம் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.

உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன. பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது. தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

சுய தொழிலில் போட்டிகளை சந்திப்பீர்கள். முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இந்த மாதம் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும்.
உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வயதானவர்களுக்கு மலச்சிக்கல் போன்ற வயிறு சம்பந்தமான உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம். எனவே அவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

**சுப நாட்கள்:**
1, 8, 10, 14, 15, 20, 25, 28, 29.
**அசுப நாட்கள்:**
6, 7, 11, 12, 13, 17, 24.




திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு இந்த மாதம் மனதிற்கு பிடித்த வரன் அமையும்.

உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும். பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.

தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். வெளிநாட்டில் உத்தியோகம் தேடுபவர்களுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

ஏற்றுமதி சம்மந்தப்பட்ட தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். சுயதொழிலில் நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.

இந்த மாதம் முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். துரித உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

மாணவர்களுக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். வழிகாட்டுதலைப் பின்பற்றினால் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
1, 8, 10, 20, 25, 28.
**அசுப நாட்கள்:**
6, 7, 13, 14, 15, 24, 29, 30.




கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும். குடும்பத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளை நீங்கள் தீர்க்கவேண்டியிருக்கும்.

இந்த மாதம் பணப்புழக்கம் சுமாராக இருக்கும். ஊடகத்துறை, கல்வித்துறை மற்றும் சட்டத்துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் சுமூகமான உறவு நீடிக்கும். நீங்கள் ஊடகங்களில் பணி புரிபவர் என்றால் இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டமான மாதம் என்று கூறலாம்.

சுயதொழில் மற்றும் கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு இந்த மாதம் சிறந்த பலன்கள் கிட்டும். புதிய தொழில் மற்றும் புதிய வாடிக்கையாளர்களைப் பெறும் வாய்ப்புகள் அதிகம். தொழில் மூலம் லாபமும் பெறுவீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணியில் அதிக பதட்டம் காரணமாக உங்களுக்கு பிரச்சினை ஏற்படும் என்பதால் நீங்கள் சிறிய பிரச்சினை என்றாலும் உடனடியாக மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வது நல்லது.

பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் சுமாரான பலன்களைக் காண்பார்கள். போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் வெற்றி காண கடுமையாக உழைக்க வேண்டும்.

**சுப நாட்கள்:**
1, 7, 8, 10, 14, 20, 28, 29.
**அசுப நாட்கள்:**
6, 15, 16, 17, 18, 24, 25.




குடும்பத்தில் உள்ளவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கூடும். நண்பர்களிடம் பண விஷயம் சம்பந்தமான கருத்து வேறுபாடு ஏற்படும்.

இந்த மாதம் உங்கள் நிதிநிலையில் ஏற்ற இறக்கம் இருக்கும். வீடு மற்றும் வாகனம் சம்மந்தப்பட்ட செலவுகள் ஏற்படும்.

அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும்.
தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை. வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்கள் நாடி வரும். கூட்டுத் தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.

உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம்.

வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். மாணவ மாணவியர்கள் அதிக கவனத்துடன் அதிக நேரம் படிக்க நேரும்

**சுப நாட்கள்:**
1, 6, 7, 8, 10, 14, 15, 28, 29.
**அசுப நாட்கள்:**
5, 6, 18, 19, 20, 24, 25.




நீங்கள் திருமணத்திற்குக் காத்திருப்பவர் என்றால் உங்களுக்கு ஏற்ற துணை கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நண்பர்கள் உதவுவார்கள்.

உங்கள் முதலீடுகள் வளர்ச்சி காணும். புதிய தொழில் கூட்டாளிகளும் வளர்ச்சி காண்பார்கள். உங்கள் நிதிநிலையில் திடீர் மாற்றங்கள் ஏற்படும். பதவி உயர்வு காரணமாக உங்கள் வருமானம் உயரும்.

இந்த மாதம் உங்கள் பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் முன்னேற்றத்தில் எந்தவித தடையும் இருக்காது. வெளிநாட்டு வேலையை எதிர் நோக்கி காத்திருந்தவர்களுக்கு வெளிநாட்டு உத்தியோகம் கை கூடிவரும்.

இந்த மாதம் உங்கள் தொழிலில் போட்டிகள் நிறைந்து இருக்கும். உங்கள் செயல்திறம் படிப்படியாக முன்னேற்றம் காணும்.
உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.
பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். மாணவர்கள் பதட்டமின்றி செயல்பட்டு படிப்பில் வெற்றி காண்பார்கள். போட்டித் தேர்வுகளை எழுதும் மாணவர்கள் சிறிது கடினமான சூழ்நிலையை
எதிர்கொள்வார்கள்.

**சுப நாட்கள்:**
1, 7, 8, 10, 14, 15, 28, 29.
**அசுப நாட்கள்:**
5, 6, 20, 22, 23, 24, 25.




திருமணமான தம்பதிகளுக்கு மாதத்தின் முற்பகுதியை விட பிற்பகுதியில் நல்லுறவு காணப்படும். வீட்டில் திருமணம் மற்றும் வளைகாப்பு பேன்ற விருந்து விசேஷங்கள் நடக்கும் வாய்ப்புகள் உள்ளது. குழந்தைகளுடனான உறவு வலுப்படும்.

இந்த மாதம் நீங்கள் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உள்ளது. கடன்

வேண்டி விண்ணப்பித்திருந்தால் அது கிடைக்கும். பயணங்கள் தொடர்பான செலவுகள் ஏற்படும்.
தனியார் துறையில் வேலை செய்பவர்கள் தங்களின் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற ஆர்வத்துடன் பணியாற்ற வேண்டும்.

கூட்டுத் தொழில் செய்பவர்கள் சுமுகமான முறையில் தொழில் நடக்கவும் தொழிலில் வெற்றி காணவும் கவனமுடன் செயல்பட வேண்டும்.

இந்தமாத கடைசி பகுதிக்குப் பிறகு உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தற்போது காணப்படும் உடல் உபாதைகள் தீரும். நீங்கள் மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது சிறப்பு.

மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்பதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறுவார்கள். சிறிது முயற்சி மேற்கொள்வதன் மூலம் மாணவர்கள் கல்வியில் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**

1, 7, 8, 10, 15, 28.

**அசுப நாட்கள்:**

4, 5, 6, 13, 14, 20, 22, 23, 24, 25, 29, 30.




திருமணமான தம்பதிகளுக்கு இந்த மாதம் அனுகூலமான மாதமாக இருக்கும். தம்பதிகள் இருவரும் கருத்தொருமித்து வாழ்வீர்கள். திருமண தாமதம் ஏற்பட்டவர்களுக்கு ஏற்ற துணை கிடைக்கும்.

உங்கள் பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன. பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது.

தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் நீங்கள் நல்ல பெயர் பெறுவீர்கள். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை காணப்படும். இடுப்பு மற்றும் முதுகு வலி வருவதற்காண வாய்ப்புகள் உள்ளது.

பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் சிறந்து விளங்குவார்கள். கல்விக்கான உதவித் தொகை விரும்பும் மாணவர்கள் தங்கள் விரும்பும் வகையில் உதவித் தொகை பெறுவார்கள்.

**சுப நாட்கள்:**

01, 07, 08, 10, 14, 15, 20.

**அசுப நாட்கள்:**

05, 06, 11, 25, 26, 27, 28.




குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.
இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்கு வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்ய இந்த மாதம் ஏற்ற காலமாக இருக்கும்.

வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகளை கொடுக்கும் மிகவும் உன்னதமான மாதமாக இந்த மாதம் அமைகிறது.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

கூட்டுத்தொழில் செய்பவர்களின் வருமானம் அதிகரிக்கும். நீங்கள் தொழிலில் புதிய யுத்திகளைக் கையாள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள். பணிக்கு புதிய ஆட்களை நியமிப்பீர்கள்.
இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கிய உணவை சரியான நேரத்தில் உண்டு வருவதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை காத்துக் கொள்ள முடியும்.

பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம். வெளிநாடு சென்று படிக்க நினைக்கும் மாணவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறக் காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
01, 08, 10, 14, 15, 20, 25.
**அசுப நாட்கள்:**
05, 06, 07, 28, 29, 30.




இளம் வயது அன்பர்களுக்கு, இந்த மாதம் காதல் உறவு இனிமையாக இருக்கும். உங்களில் சிலருக்கு மனதில் காதல் மலரும். திருமணமான தம்பதிகளுக்கிடையே நல்லுறவு காணப்படும்.

தங்களின் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஸ்திரமான நிதிநிலை இருக்கும். பெரிய அளவில் நஷ்டங்கள் ஏதும் ஏற்படாது குடும்பத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும்.
வேலை செய்யும் இடத்தில் நீங்கள் பிறரை விமர்சிக்கவும் அதனால் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாகவும் சாதுரியத்துடனும் செயல்படுங்கள்.

சுயதொழில் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். தொழில் கூட்டாளி மூலம் நல்ல ஆதாயங்களை பெறமுடியும். ஏற்றுமதி தொழிலில் உள்ளவர்கள் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம்.

மத்திம வயதில் இருப்பவர்கள் கழுத்து வலி மற்றும் உடல் வலி போன்ற உபாதைகளை சந்திக்க நேரும். சிறிய அளவிலான உபாதைகள் என்றாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது.
உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு படிப்பில் சிறிது கவனச்சிதறல்கள் ஏற்படலாம். ஆராய்ச்சி கல்வியில் படிக்கும் மாணவர்கள் தங்களது ஆராய்ச்சியில் வெற்றி காண்பார்கள்.

**சுப நாட்கள்:**
01, 08, 10, 14, 15, 20, 28, 29.
**அசுப நாட்கள்:**
03, 04, 05, 06, 07, 24, 25.




குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் வாய்ப்புகள் உள்ளது. காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை.
மருத்துவத் துறையில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் நல்ல வருமானம் கிடைக்கும். கடன் வாங்கக்கூடிய வாய்ப்பும் உள்ளது. கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும்.

அரசு தொழில் புரிபவர்கள் மேல்

அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும். வெளிநாட்டில் உத்தியோகம் தேடுபவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள்.

சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்றுமதி தொழிலில் உள்ளவர்கள் இந்த மாதம் தங்கள் தொழிலில் பிரகாசிப்பார்கள். வியாபாரம் செய்பவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும்.

இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சவால் மிக்கதாக இருக்கும். சிறு உடல் உபாதைகள் வந்து போகும். தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.

மாணவர்கள் கவனச்சிதறலுக்கு எளிதில் ஆட்படுவார்கள். கவனச் சிதறல் அவர்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும். ஆராய்ச்சி கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள். அவர்களுக்கு கல்வியில் வெற்றி கிடைக்கும்.

**சுப நாட்கள்:**
1, 8, 10, 14, 28, 29.
**அசுப நாட்கள்:**
5, 6, 7, 11, 24, 25.




இந்த மாதம் உங்கள் உறவினர்களுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் மாதமாக இருக்கும். காதலில் வெற்றி கிடைக்கும். அன்னியோன்யம் கூடும்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் லாபம் பெறும் வாய்ப்பு உள்ளது.


உத்தியோகத்தில் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றி அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள்.

சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும். பங்கு வர்த்தக தொழில் செய்பவர்களுக்கு நல்ல தன வரவும் அதிக லாபமும் கிடைக்கும்.

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கரை தேவை.

பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் வெற்றி பெறுவார்கள். வெளிநாட்டில் கல்வி பயில நினைக்கும் மாணவர்கள் சில தாமதங்களை சந்திப்பார்கள்.

**சுப நாட்கள்:**
1, 10, 15, 20, 28.
**அசுப நாட்கள்:**
6, 7, 8, 9, 11, 13, 14, 24, 25, 29, 30.

SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701